**ஓம்சாந்தி**

**சம்பூரண சொரூபத்தின் அழைப்பு**

**1.** வதனத்தில் இன்று சகலவிதமான ஆத்மாக்களும் ஹோலி கொண்டாட வந்திருந்தார்கள். அனைவரும் தத்தமது முயற்சிக்கேற்ற பலன் படி விதவிதமான பாகத்தை நடித்து வருகிறார்கள். அட்வான்ஸ் பார்ட்டியின் நடிப்பு இதுவரை மறைமுகமாக இருக்கிறது. அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என நீங்கள் யோசிக்கிறீர்கள் அல்லவா? முழுமை பெற்று தெய்வீக பிறப்பெடுத்து புதிய உலகிற்கு பொறுப்பாகச் சொல்லி உங்களை அவர்கள் அழைக்கிறார்கள். (9/3/2000)

**2.** தனது சம்பூரண சொரூப அனுபவத்தைப் பெறுவதற்காக மூன்று வார்த்தைகளின் அறிவுரை சொரூபமாகுங்கள். மனதில் நிராகாரி, வார்த்தையில் நிரகங்காரி, செயலில் நிர்விகாரி. ஒரு நொடியில் சாகார சொரூபத்திற்கு வாருங்கள், அடுத்த நொடியில் நிராகாரி சொரூபத்தில் நிலைத்து விடுங்கள். இந்தப் பயிற்சியை நாள் முழுவதும் அடிக்கடி செய்யுங்கள். அதற்காக நினைவில் அமரும் நேரத்தில் மட்டும் நிராகார நிலையில் நிலைத்திருக்க வேண்டும் என்பதல்ல, ஆனால் இடையிடையே நேரம் ஒதுக்கி இந்த தேக உணர்வில் இருந்து விலகி நிராகாரி ஆத்மா சொரூபத்தில் நிலைத்திருக்கும் பயிற்சி செய்யுங்கள். (18/01/2002)

**3.** கர்மேந்திரியங்கள் பணியாள், ஆத்மா அதிகாரி. எனவே நிராகாரி ஆத்மநிலையில் இருக்கும்போது நிராகார தந்தையின் நினைவு தானாகவே வரும். பாபா எப்படி செய்யவைப்பவரோ அப்படியே ஆத்மாவும் செய்யவைப்பவரே. எனவே செயலின் பந்தனத்தால் கட்டுப்படாமல் சுதந்திரமாக இருப்பீர்கள், ஏனெனில் கர்மத்தின் பந்தனத்தில் சிக்கும் போதே பிரச்சினைகள் வருகிறது. எனவே செய்யவைக்கும் ஆத்மாவாகி செயலைச் செய்ய வைக்கிறேனா என நாள் முழுவதும் சோதனை செய்யுங்கள். தற்போது முக்தியளிக்கும் இயந்திரத்தை தீவிரமாக்குங்கள். 18/01/2002

**4.** (தனது சம்பூரண சொருபத்தை உணர்வதற்காக) மனதை ஒருமுகப்பத்தும் சக்தி, அவ்யக்த பரிஸ்தா நிலையை எளிதில் உணர வைக்கும். வீண் விசயங்களில், வீண் எண்ணங்களில் அல்லது வீண் விவகாரங்களில் மனம் அலைகிறது. எப்படி உடலால் கூட ஓரிடத்தில் நிலையாக உட்காரும் பழக்கம் சிலருக்கு இருப்பதில்லை, சிலருக்கு இருக்கிறது. எனவே மனம் எங்கு வேண்டுமோ, எப்படி வேண்டுமோ, எவ்வளவு நேரம் வேண்டுமோ, அவ்வளவு நேரம் அந்த மாதிரி ஒருமுகப்படவேண்டும், அதைத்தான் மனம் வசத்தில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஒருமுகப்படுத்தும் சக்தி, ஆட்சிசெய்யும் சக்தி ஆகியவை எளிதில் தடையற்றவராக்கிவிடுகிறது. 15.11.2003

**5.** (தனது சம்பூரண சொருபத்தை உணர்வதற்காக) மனதை ஒருமுகப் படுத்தும் சக்தி மூலமாக, ஒரே ரச சம்பூரண பரிஸ்தா சொரூப அனுபவம் தாமாகவே உருவாகும். பிரம்மா பாபாமீது அன்பு இருந்தால் பிரம்மா பாபாவிற்குச் சமானமாக ஆகவேண்டும் அதாவது பரிஸ்தா ஆகவேண்டும். மனதை ஒருமுகப்படுத்தும் சக்திமூலமாக அனைவருடைய நலம் விரும்பும், எல்லோருக்கும் மரியாதை கொடுக்கும் உணர்வு, தாமாகவே தோன்றும், ஏனெனில் **மனதின் ஒருமுகம் என்பதே சுவமான நிலை, பரிஸ்தா நிலை, சம்பூரண நிலையாக இருக்கிறது.**

**6.** பிரம்மா பாபாவைப் பார்த்து சொன்னார்கள், என்ன பார்த்தார்கள்? போகவர பரிஸ்தா ரூபம். தேகவுணர்வற்று இருந்தார், தேகத்தின் உணர்வு வந்ததா? முன்னால் போகும்போது தேகம் பார்வைக்குத் தென்பட்டதா? அல்லது பரிஸ்தா ரூபத்தின் அனுபவம் ஏற்பட்டதா? செயல்கள் செய்து கொண்டிருந்த போதும், உரையாடிக்கொண்டிருந்த போதும், ஆலோசனைகள் வழங்கி ஊக்க உற்சாகத்தை அதிகமாக்கிய போதும், தேகத்தில் இருந்து விலகிய சூட்சும பிரகாச ரூபத்தின் அனுபவமே கிடைத்து வந்தது. 15/11/2003

**7.** பிரம்மா பாபா பேசிக்கொண்டிருந்தார், எனினும் **பேசிக்கொண்டிருந்தபோதே அவர் அங்கிருக்கவில்லை என்பது போல தோன்றியது, பார்த்துக்கொண்டிருந்தார் எனினும் பார்வை அலௌகீகமாக இருந்தது, அது சாதாரணப் பார்வையாக இருக்கவில்லை. தேக உணர்வில் இருந்து விலகி இருந்தார், மற்றவருக்கும் தேக உணர்வு வரவில்லை. பற்றற்ற ரூபம் தெரிந்தது.**

அதைத்தான் **தேகத்தில் இருந்தபோதும் பரிஸ்தா சொரூபம்** என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு விசயத்திலும் உணர்விலும் பார்வையிலும், செயலிலும் விடுபட்டிருக்கும் அனுபவம் ஏற்படவேண்டும். 1511/2003

**8.** (தனது சம்பூரண சொரூபத்தை உணர்வதற்காக) பாப்தாதா அவர்கள் எல்லா குழந்தைகளிடத்திலும் இப்போது இந்தவொரு ஆசை வைத்திருக்கிறார். பிறகு பாபாவின் பிரத்தியட்சம் ஏற்படும். உங்களுடைய செயல், நடத்தை, முகம் மூலமாக தாமாகவே சித்தி படுத்தும். பேச்சின் மூலமாக அது வெளிப்படாது. பேச்சு ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனினும் பிரத்தியட்சம் ஏற்படும். அதை செய்பவர் யார்? தானே தேடுமா. தானே கேட்குமா? உங்களுக்கு அதை செய்பவர் யார்? **படைப்பு (குழந்தைகள்) படைப்பவரை (பாபாவை) வெளிப்படுத்துவர். அதாவது 'சன் ஷோஸ் பாதர்'.** 15.01.2003

**9.** (தனது சம்பூர்ண சொரூபத்தை உணர்வதற்காக) கருணை உடையவராகுங்கள், துக்கம் அதிகமாகிக்கொண்டே போகிறது, துன்பப் படுபவர்கள் மீது இரக்கம் கொண்டு அவர்களை முக்திதாமத்திற்கு அனுப்பி வையுங்கள். வெறும் வார்த்தையின் சேவையல்ல ஆனால் இப்போது வார்த்தையின் கூடவே மனதும் சேர்ந்து சேவை செய்வது அவசியமாக இருக்கிறது. ஒரே நேரத்தில் இரண்டு சேவையும் இணைந்து இருக்க வேண்டும். சேவை கிடைக்கும்போது மட்டும் செய்து கொள்ளலாம் என நினைக்காதீர்கள், போக வர தனது முகம் மற்றும் நடத்தை மூலமாக பாபாவின் அறிமுகத்தை கொடுத்துக்கொண்டே இருங்கள். உங்கள் முகம் பாபாவின் அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும். உங்கள் நடத்தை மூலமாக பாபாவை வெளிப்படுத்திக்கொண்டே செல்லுங்கள். எனவே அப்படிப்பட்ட சேவாதாரி ஆகுங்கள். 30/11/2006

**10.** இப்போது உங்கள் முகம் மற்றும் நடத்தை மூலமாக பிரம்மா பாபாவிற்குச் சமானமா அவ்யக்த ரூபத்தை காட்டுங்கள், காட்சிதரும் மூர்த்தி ஆகுங்கள் (20/11/2004). சாதாரண உடலில் இருந்தபோதும் ஆரம்ப காலத்தில் பிரம்மா பாபாவிடம் கிருஷ்ணர் தெரிந்தார். ஆரம்பத்தில் இருந்தவர்களுக்கு அனுபவம் இருக்கிறதல்லவா. எனவே எப்படி ஆரம்பத்தில் பிரம்மாபாபா மூலமாக கிருஷ்ணர் தெரிந்தாரோ அப்படி கடைசியில் அவ்யக்த ரூபம் தெரிந்தது அல்லவா! நடத்தையிலும் முகத்திலும் தெரிந்ததல்லவா! இப்போது பாப்தாதா விசேசமாக நிமித்தமான குழந்தைகளுக்கு இந்த 'ஹோம்வொர்க்' தருகிறார். அதாவது இப்போது **பிரம்மா பாபாவிற்கு சமானமாக உங்களிடமும் அவ்யக்த ரூபம் தெரிய வேண்டும்.** (31/11/2004)

**11.** நினைவுகளில் ஞானமும் இருக்கிறது, போதையும் இருக்கிறது, நம்பிக்கையும் இருக்கிறது என்பதை பாப்தாதா அவர்கள் பார்த்தார்கள், எனினும் அவைகள் இப்போது முகத்திலும், நடத்தையிலும் தெரியவேண்டும். புத்தியில் எல்லா நினைவுகளும் இருக்கிறது. எண்ணங்களிலும் வருகிறது, ஆனால் இப்போது சொரூபத்தில் வர வேண்டும். 31.11/2004

**12.** சாதாரண ரூபத்தில்கூட யாராவது பெரிய பதவியில் இருந்தால், அல்லது அதிகம் படித்த, அல்லது செல்வந்தரின் பிள்ளையாக இருந்தால் அவர்களிடம் ஏதோ இருக்கிறது என்பது அவர்கள் நடத்தையில் தெரிய வருகிறது. அவர்களிடம் ஏதாவது வித்தியாசம் தெரிகிறது. அப்படி இருக்க, இவ்வளவு பெரிய பாக்கியம் ஆஸ்தியாக இருக்கிறது, படிப்பு மற்றும் பதவியாகவும் இருக்கிறது. சுயராஜ்ஜியமோ இப்போதும் இருக்கிறது. எல்லா பிராப்திகளும் இருக்கிறது. எனவே முகம் மற்றும் நடத்தையில் பாக்கியத்தின் நட்சத்திரம் பிரகாசித்துக் கொண்டிருப்பது நெற்றியில் தெரிய வேண்டும், அதை இப்போது சேர்க்க வேண்டும். 31/11/2004

**13.** சேவை செய்தபோதும் அதிலிருந்து விலகியிருந்து எல்லையற்ற உணர்வு மூலம் எவரெடியாகி பிரம்மா பாபாவிற்கு சமானமாக நிறைந்தவர் ஆகுங்கள். பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தையிடமும் அதிக அன்பு இருக்கிறது. எனவேதான் ஒவ்வொரு குழந்தையும் நிறைவு பெற வேண்டும், சமானமாக வேண்டும் என்று பாப்தாதா விரும்புகிறார். சேவை செய்யுங்கள் ஆனால் சேவையிலும் பற்றற்று, எல்லையற்று இருங்கள். பிரம்மா பாபாவிற்குச் சமானமாக ஆகியே தீரவேண்டும், எண்ணம், சொல், சேவை, உறவு-தொடர்பு ஆகிய அனைத்திலும் பிரம்மா பாபாவிற்கு சமானமாக வேண்டும். 03/02/2004

**14.** இல்லறத்தில் இருப்பவர்கள் தாமரை மலர் போல வாழவேண்டும் என்று நீங்கள் உங்கள் சொற்பொழிவில் சொல்வது போல எல்லாம் செய்தபோதும், செய்தேன் என்ற உணர்வில் இருந்து விலகியிருங்கள். சாதனங்களுக்கோ, பதவிக்கோ வசமாகாதீர்கள். பாபாவிடம் அன்பாகவும் மற்றவற்றில் பற்றற்றும் இருங்கள். அன்பு எப்படி 100 சதவீதம் இருக்கிறதோ அப்படி முயற்சியும் 100 சதவீதம் நிறைவாக இருக்க வேண்டும். 03.02.2004

**15.** சம்பூரண (முழுமை) மற்றும் சம்பன்ன (நிறைவு) பெறும் நாளை முடிவெடுத்து நேரத்திற்குத் தக்கபடி ‘எவரெடி’ ஆகுங்கள். **பிராமணனில் இருந்து பரிஸ்தா, பரிஸ்தாவில் இருந்து தேவதை. இந்த மூன்று ரூபங்களையும் பாப்தாதா எல்லா குழந்தைகளிடமும் பார்த்துக்கொண்டிருக்கிறார்.** உங்கள் எல்லோருக்கும் தமது இந்த மூன்று ரூபங்களும் முன்னால் வந்து விட்டதா? ஏற்கனவே பிராமணனாகி விட்டீர்கள், பரிஸ்தாவாக வேண்டியதே இலட்சியம், பரிஸ்தாவாகியே தீரவேண்டும். பரிஸ்தாவாகி விட்டதன் சிறப்பியல்புகள் நடைமுறை வாழ்க்கையில் தெரிகிறதா என சோதித்து அறியுங்கள். 21/10/2005

**16.** எப்படி பாபாவை எல்லோரும் அனுபவம் செய்கிறார்கள், என்னுடையவர் என்ற அனுபவம் இருக்கிறதல்லவா? அதே போல பரிஸ்தா என்றால் ஒவ்வொருவரும் இவர் என்னுடையவர் என உணர வேண்டும். தம்முடையவர் என்ற உணர்வு இருக்க வேண்டும் ஏனெனில் இலேசாக இருக்கிறீர்களல்லவா அப்போது அந்த சுமூக உணர்வு எல்லோருக்கும் பிரியமானவராக்கி விடுகிறது. இவர் என்னுடையவர் என்ற உணர்வை பிராமண குடும்பத்தார் எல்லோரும் பெற வேண்டும். 21/10/2005

**17.** சம்பூரண அவ்யக்த பரிஸ்தா என்றால் டபுள் பரிஸ்தாவாக இருப்பது அதாவது எண்ணம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பில் எல்லையற்று இருப்பது. எல்லைக்குள் இருக்கக்கூடாது. எல்லோரும் என்னுடையவர் மேலும் நான் எல்லோருடையவர். எப்போது தன்னுடையவர் என்ற உணர்வு அதிகமாக இருக்கிறதோ அங்கு எல்லாம் இலகுவாக இருக்கும். சமஸ்காரமும் இலகுவாக இருக்கும் என்றால் எத்தனை சதவீதம் பரிஸ்தா நிலையை எட்டியிருக்கிறீர்கள் என்பதை செக் செய்யுங்கள். 21/10/2005

**18.** நான்கு விசயங்கள் நினைவில் இருக்கிறதல்லவா – மனம், சொல், சம்பந்தம்-தொடர்பு இதில் செயலும் வந்துவிட்டதல்லவா. நான்கு விசயங்களிலும் சம்பூரணம் மற்றும் சம்பன்னம் வேண்டும். மனம், சொல்லில் சரியாக இருக்கிறோம், சம்பந்தம்-தொடர்பில் குறைவாக இருக்கிறோம் என இருக்கக்கூடாது. யாருக்கு முன்னால் சென்றாலும், யாருடைய தொடர்பில் வந்தாலும் இவர் என்னுடையவர் என உணர வேண்டும் என்பதை கேட்டிருக்கிறீர்கள்தானே. எப்படி என்னுடைய பாபா என சொல்கிறீர்கள் அல்லவா அப்படி.

**19.** ‘இப்போது – ஒரு நிமிடம் அப்படி சர்வ சக்திகளும் நிறைந்து பவர்புல்லாக, உலகிலுள்ள ஆத்மாக்களுக்கு கிரணங்களைத் தாருங்கள், அதன்மூலம் உங்களுடைய சக்திமிக்க அதிர்வலைகள் உலகத்தின் நாலா புறங்களிலும் பரவ வேண்டும். இப்படி குழந்தைகளை சம்பன்ன–சம்பூரண நிலையில் நிலையாக இருக்க வைக்க பாப்தாதா ‘டிரில்’ செய்ய வைத்தார். (டெட் சைல்ன்ஸ்)21/10/2005

**20.** நேரம் நெருங்கி வருவதற்குத் தக்கபடி தம்மை எல்லைக்குட்பட்ட பந்தனங்களில் இருந்து விடுவித்து, சம்பன்னமாகவும், சமானமாகவும் ஆகுக! ‘இன்று நாலா புறங்களிலும் உள்ள முழுமைபெற்ற சமானமான குழந்தைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். சமானமான குழந்தைகளே பாபாவின் உள்ளத்தில் கலந்திருக்கிறார்கள். சமானமான குழந்தைகளின் சிறப்பு, அவர்கள் எப்போதும் தடையற்று, விகாரமற்று இருப்பதோடு, பணிவாகவும் களங்கமின்றியும் இருப்பார்கள். அப்படிப்பட்ட ஆத்மாக்கள் எப்போதும் சுதந்திரமாக இருப்பார்கள், அவர்கள் எப்படிப்பட்ட எல்லைக்குட்பட்ட பந்தனத்திலும் சிக்குவதில்லை. அப்படிப்பட்ட எல்லையற்ற சுதந்திரமுடைய ஆத்மாவாகி விட்டேனா என தன்னைத்தானே கேளுங்கள்.

**21.** அனைத்திலும் முதலாவது சுதந்திரம் தேக உணர்வில் இருந்து சுதந்திரம். எப்போது வேண்டுமோ அப்போது தேகத்தை ஆதாரமாகப் பெறுங்கள், எப்போது வேண்டுமோ அப்போது

தேகத்தில் இருந்து விலகிவிடுங்கள். தேகக் கவர்ச்சிக்கு ஆளாகாதீர்கள். இரண்டாவது விசயம் என்னவென்றால் சுதந்திர ஆத்மா எந்தவிதமான பழைய சுபாவ-சமஸ்காரங்களின் பந்தனத்தில் இருப்பதில்லை. அதாவது பழைய சுபாவ-சமஸ்காரங்களிடமிருந்து விடுதலை பெற்றிருப்பார்கள். கூடவே எந்தவொரு தேகதாரி ஆத்மாவின் சம்பந்தம் தொடர்பில் வரும போதும் கவர்ச்சி இருப்பதில்லை. சம்பந்தம் தொடர்பில் வந்தபோதும் விடுபட்டும் அன்பாகவும் இருப்பார்கள். 30/11/2005

**22.** கஜானாக்களை எப்போதும் தமக்காகவும் மற்ற எல்லோருக்காகவும் செயலில் பயன் படுத்துங்கள் என பாபா சொல்கிறார். எவ்வளவு செயலில் பயன்படுத்துகிறீர்களோ அந்த அளவு அவைகள் பெருகும்

**23.** நேரத்திற்கு முன்பு எல்லா ஆத்மாக்களும் எவரெடியாகிவிட வேண்டும் என்றே பாப்தாதா அவர்கள் விரும்புகிறார்கள். நேரம் உங்களுக்கு மாஸ்டர் ஆகக்கூடாது. நீங்களே நேரத்தின் மாஸ்டர், எனவே நேரத்திற்கு முன்பாக நிறைவு பெற்று முழுமையாகி உலக மேடையில் பாபாவோடு கூடவே குழந்தைகள் நீங்களும் வெளிப்படவேண்டும் என்பதையே பாப்தாதா விரும்புகிறார்கள். 30/11/2005

**24.** வீணானவைகளின் பெயர் அடையாளம் எதுவும் இல்லாதபடி, அப்படிப்பட்ட முழுமையான பவித்திர நிலையை பரமாத்மா மீது உள்ள அன்பால் உருவாக்குங்கள். பாபாவின் உள்ளம் கவர்ந்த நிலையாக இருப்பது முழுமையான உளத்தூய்மை. பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரமாக இருப்பதும் முழுமையான உளத்தூய்மையே. முழுமையான உளத்தூய்மையின் ஆழத்தை அறிந்திருக்கிறீர்களா? எண்ணத்திலும் தொடர்பிலும் இம்மியளவுகூட அபவித்திரத்தின் பெயரடையாளம் எதுவும் இருக்கக்கூடாது. பாப்தாதா தற்காலத்தில் நேரம் நெருங்கி வருவதற்குத் தக்கபடி, முழுமையான உளத்தூய்மையின் கணக்குப்படி வீண் எண்ணங்கள் இருப்பதும் முழுமையாக இராது என அடிக்கடி உங்கள் கவனத்தை ஈர்க்கிறார். 03/02/2006

**25.** சம்பூரண மற்றும் சம்பன்னநிலை எந்த அளவிற்கு உருவாகி இருக்கிறது என்பதை தனக்குத்தானே கேளுங்கள். என்ன சப்தத்தை கடந்து செல்வது மற்றும் சப்தத்திற்குள் வருவது இரண்டிற்கும் வித்தியாசம் இல்லாமல் சமானமாக இருக்கிறதா? எப்படி சப்தத்திற்குள் வருவது எப்போது வேண்டுமானாலும் எளிதாக இருக்கிறதோ, அப்படி சப்தத்தைக் கடந்து செல்லவும் வேண்டும். நொடியில் சப்தத்தைக் கடந்துவிட வேண்டும், அவ்வளவு பயிற்சி இருக்கிறதா.

**26.** உலக ஆத்மாக்களை துக்கத்தில் இருந்து விடுவிப்பதற்காக மனசேவையை அதிகமாக்குங்கள். நிறைவாகவும் முழுமையாகவும் ஆகுங்கள். எப்படி விஞ்ஞானிகள் தமது இடத்தில் இருந்துகொண்டே தமது இயந்திரங்களை எங்கு வேண்டுமோ அங்கு செலுத்துகிறார்கள். அப்படி மன சக்தியின் மூலமாக நீங்கள் சேவை செய்யுங்கள். மனசா சேவையை அதிகமாக்குங்கள். வார்த்தை சேவை செய்யத்தான் வேண்டும் எனினும் உலகில் உள்ள எல்லா ஆத்மாக்களுக்கும் ஆஸ்திகளைக் கொடுப்பது, துன்பத்தில் இருந்து விடுவிப்பது ஆகியவைகளுக்காக நீங்கள் நிறைந்தவர்(சம்பூரண)ஆக வேண்டும். 28/03/2006

**27.** எப்படி உடல் மூலமாக எப்போது வேண்டுமோ எங்கு வேண்டுமோ அங்கு சென்று வரமுடிகிறது. அதேபோல மனம் மற்றும் புத்தி மூலமாக எப்போது வேண்டுமோ எங்கு வேண்டுமோ அங்கு சென்று வர முடிகிறதா? ஏனெனில் கடைசியில், யார் எங்கு வேண்டுமோ, எப்படி வேண்டுமோ, எதற்குக் கட்டளையிட வேண்டுமோ அவைகளில் வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்கே 'பாஸ் மார்க்' கிடைக்கும். 28/03/2006

**28.** எளிதாகவும் இருக்க வேண்டும், குறைந்த நேரத்திலும் செய்ய வேண்டும் என்றே விஞ்ஞானிகளும் முயற்சி செய்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட நிலை நிமிடம் வரை வந்திருக்கிறதா, அல்லது வினாடி வரை வந்திருக்கிறதா, எதுவரை வந்திருக்கிறது? எப்படி கலங்கரை விளக்கு 'ஆன்' செய்த உடன் நொடியில் வெளிச்சத்தை பரப்புகிறதோ, அதேபோல உங்களால்,. களங்கரை விளக்காகி வினாடியில் நாலாபுறமும் 'லயிட்'-'மயிட்' பரப்ப முடியுமா?

**29.** இந்த ஸ்தூலக் கண்களால் ஓரிடத்தில் அமர்ந்தபடியே வெகு தூரம் வரை பார்க்க முடியும்! தனது பார்வையை பரப்ப முடியும்! அதேபோல மூன்றாவது கண் மூலமாக ஓரிடத்தில் அமர்ந்தபடியே வரம் தருபவராக, விதியை மாற்றுபவராக மாறி நாலாபுறமும் மற்றவரை உங்கள் பார்வையால் கரையேற்ற முடியுமா? தன்னை எல்லா விசயங்களிலும் சோதித்து அறிகிறீர்களா? **அந்த அளவு மூன்றாவது கண் சுத்தமாகவும் தெளிவாகவும் இருக்கிறதா?** 28/03/2006

**30.** ஸ்தாபனையின் காரியமான தன்னை நிறைவும் முழுமையும் ஆக்குவது, அனைத்து ஆத்மாக்களுக்கும் முக்தியின் ஆஸ்தி கொடுப்பது ஆகியவை நிறைவேறி விட்டதா என்ன? என்பதை நீங்களே உங்கள் ரிசல்ட்டின் கணக்குப்படி பாருங்கள். தன்னை ஜீவன் முக்தி சொரூபமாக்க வேண்டும், மேலும் அனைத்து ஆத்மாக்களுக்கும் முக்தியை ஆஸ்தியாக கொடுக்க வேண்டும் - இதுவே ஸ்தாபனை செய்யும் ஆத்மாக்கள் உங்களுடைய சிறந்த செயல்

**31.** அனைத்து பந்தனங்களில் இருந்தும் விடுபட்ட ஜீவன்முக்தி நிலையை சங்கமயுகத்தில் அடைய வேண்டுமா அல்லது சத்யுகத்தில் அடைய வேண்டுமா? என பாப்தாதா அவர்கள் கேட்கிறார்கள். எல்லாம் நிறைந்தவராக இங்குதானே ஆகவேண்டும்? முழுமை பெற்றவராகவும் இங்குதானே ஆகவேண்டும். சங்கமயுக நேரம்கூட அனைத்திலும் பெரிய பொக்கி**ஷ**மாக இருக்கிறது, எனவே யார் தடுப்பதால் சங்கமயுகம் இன்னும் காத்திருக்கிறது, சொல்லுங்கள். 28/03/2006

**32.** குழந்தைகளிடம் மாற்றம் வராததால் உலக மாற்றத்திலும் தொய்வு ஏற்பட்டுள்ளது என்பதை பாப்தாதா அவர்கள் பார்த்தார்கள். மேலும் உலக ஆத்மாக்கள் புதுப்புது விதமான துன்பத்திற்கு ஆளாகிறார்கள். துக்க - அசாந்திக்கு புதுப்புது காரணங்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே பாபா இப்போது குழந்தைகளின் துன்பப் புகார்களைக் கேட்டு மாற்றம் கொண்டுவர விரும்புகிறார். எனவே, ஏ! **மாஸ்டர் சுகந்தரும் குழந்தைகளே**, துன்பப்படுவோர் மீது கருணை காட்டுங்கள். பக்தர்களும் பக்தி செய்து களைத்துப் போய் இருக்கிறார்கள். (தான் முழுமையாகி) பக்தர்களுக்கு முக்தியின் ஆஸ்தி கொடுங்கள். 21/12/2006

**33.** பாபா தன்னுடையவராக ஆக்கி இருக்கிறார். இந்த சந்தோஷத்தில் எப்போதும் பறந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா. பறந்துகொண்டிருக்கிறீர்கள், நடந்து கொண்டிருக்கவில்லை, பறந்து கொண்டிருக்கிறீர்கள், ஏனென்றால் நடப்பவர்கள் பாபாவோடு தமது வீட்டிற்குப் போக முடியாது. ஏனென்றால் பாபாவோ பறப்பவர், அப்படி இருக்க நடப்பவர் எப்படி கூடவே சென்று சேர முடியும். எனவே பாபா அனைத்து குழந்தைகளுக்கும் **'பரிஸ்தா சொரூப பவ'** என வரந்தருகிறார். பரிஸ்தாக்கள் பறப்பார்கள், நடப்பதில்லை, பறக்கிறதென்றால் நீங்கள் எல்லோரும்கூட பறக்கும் கலை உடையவர்தானே.

**34.** வரிசைக்கிரமமாக இருந்தாலும் எப்போதும் தீவிர முயற்சி செய்பவராக இருப்பது அவசியம். நேரம் நிறைவை நோக்கி விரைவாகச் சென்றுகொண்டிருக்கிறது ஆகவே குழந்தைகள் இப்போது பாபாவிற்குச் சமானமாக ஆகியே தீரவேண்டும். அதுவும் நிச்சயிக்கப்பட்டுள்ளது, எனினும் அதில் இப்போது வேகம் வேண்டும். நான் எப்போதும் தீவிர முயற்சி செய்பவராக இருக்கிறேனா என ஒவ்வொருவரும் தன்னை சோதித்துப் பார்க்க வேண்டும். ஏனெனில் முயற்சியில் பல தேர்வுகள் வந்துகொண்டே இருக்கிறது, எனினும் முயற்சி செய்பவர்கள் தேர்வில் பாஸாவது அப்படி நிச்சயிக்கப்பட்டுள்ளது அதாவது **தீவிர முயற்சியாளர்கள் ஏற்கனவே தேர்வில் தேறிவிட்டதாக இருக்கிறது**. 17/03/2007

**35.** அனைத்திலும் எளிய சேவை சாதனமாக இருப்பது உணர்வுகள் மூலமாக எண்ண அதிர்வுகளை தோற்றுவித்து பின்னர் அந்த அதிர்வுகள் மூலமாக வாயுமண்டலத்தை உருவாக்குவது என்பதை பாப்தாதா பார்த்தார். ஏனெனில் உணர்வுகள் அனைத்தையும்விட வலிமைவாய்ந்த சாதனமாக இருக்கிறது. எப்படி அறிவியலின் ராக்கெட் வேகமாகப் போகிறதோ அப்படி உங்களுடைய ஆன்மீக சுப பாவனை, சுப ஆசைகளின் உணர்வுகள, பார்வைகள் உலகை மாற்றி அமைத்து விடுகிறது. ஓரிடத்தில் அமர்ந்திருந்தபோதும் உணர்வுகள் மூலமாக

சேவை செய்ய முடிகிறது. கேட்ட விசயங்கள் மறந்து விடுகிறது. எனினும் வாயுமண்டலத்தால் உண்டாகும் அனுபவம் மறந்து போவதில்லை. 17/03/2007

**36.** தனது மாஸ்டர் ஞானசூரிய சொரூபத்தை வெளிப்படுத்துங்கள். கிரணங்களைப் பரப்புங்கள் சக்திகளைப் பரப்புங்கள். எப்படி ஸ்தாபனையின் ஆரம்ப காலத்தில் பாப்தாதா தரப்பிலிருந்து அனேக ஆத்மாக்களுக்கு சுக-சாந்தியின் அலைகள் வீட்டில் இருந்தபடியே அனுபவமானதோ, போக வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதோ, அதுபோல இப்போது மாஸ்டர் ஞான சூரிய குழந்தைகளான உங்கள் மூலமாக சுக-சாந்தியின் அலைகள் பரவுகிற அனுபூதி ஏற்படவேண்டும். ஆனால் எப்போது மனம் ஒருமுகப்படுகிறதோ, நினைவு ஒருமுகப்படுகிறதோ அப்போதே அது ஏற்படும். அதனால் ஒருமுகப்படுத்தும் சக்தியை தனக்குள் அதிகமாக்குங்கள். 02/02/2006

**37.** அனாதி காலத்திலும் குறைந்த எண்ணிக்கையிலான ஆத்மாக்கள் நீங்களே ஆத்ம சொரூபத்திலும் விசேச பிரகாசத்துடன் ஜொலித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரமாக இருந்தீர்கள், மற்ற ஆத்மாக்களும் இருந்தன, எனினும் நட்சத்திரங்களாக, உங்களுடைய பிரகாசம் அனைவரோடு இருந்தபோதிலும், சிறப்பாக இருந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். எப்படி ஆகாயத்தில் நிறைய நட்சத்திரங்கள் இருக்கின்றன. எனினும் சில நட்சத்திரங்கள் ஸ்பெஷலாக பிரகாசிக்கின்றன. 'பர்ஸனாலிட்டி' எவ்வளவு மகத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது என்பதைப் பாாக்கிறீர்களா. 02/02/2008

**38.** இப்போது எல்லோரும் ஆதிகாலத்திற்கு சென்று சேருங்கள், எனது பிரகாசத்தின் அளவு எத்தனை சதவீதம் இருக்கிறது என்று 'செக்' செய்யுங்கள். ஆதிகாலத்தில் இருந்து கடைசி காலம் வரை உங்கள் தூய்மையின் 'ராயல்டி', 'பர்ஸனாலிட்டி' எப்போதும் இருந்து வருகிறது. அனாதி காலத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் நட்சத்திரமாக, பிரகாசித்துக்கொண்டே பாபாவோடு இருக்கக்கூடியவர். இப்போதே தனது அந்த சிறப்பை அனுபவம் செய்யுங்கள், எல்லோரும் அனாதி காலத்திற்கு சென்று சேர்ந்து விட்டீர்களா!

**39.** சமானமாவேன் என உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா அதைத்தான் பாபா விரும்புகிறார். உங்கள் பேச்சு பாபாவிற்கு சமமான பேச்சாக இருக்க வேண்டும், பாப்தாதாவின் சொற்கள் வரதானமாகி விடுகிறது. எனவே எனது முகம் பாபாவின் ரூபத்தை காட்டுகிறதா? என நீங்கள் எல்லோரும் தன்னைச் 'செக்' செய்யுங்கள். பாபாவின் உருவம் எது? முழுமையானவர், அனைத்து விசயங்களிலும் நிறைந்தவர். இப்படி ஒவ்வொரு குழந்தையின் கண்களும், ஒவ்வொரு குழந்தையின் முகமும் பாபாவிற்கு சமானமாகி இருக்கிறதா? எப்போதும் முகம் மகிழ்ச்சியாகி இருக்கிறதா? எப்போதும் ரோஜாவைப்போல மலாந்த முகமாக இருக்கிறதா? 04/03/1998

**40.** இப்போது நேரம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது, எப்போது வேண்டுமானாலும் எதுவும் நடக்கலாம் என்ற சைகை கிடைத்து வருகிறது. அப்படிப்பட்ட நேரத்தை எதிர் கொள்வதற்காக 'எவரெடி' மற்றும் 'அலர்ட்'ஆக இருப்பது அவசியமாகிறது. 'அலர்ட்'டாக இருப்பதற்கு, தனது மனம் மற்றும் புத்தி எப்போதும் **சுத்தமாகவும், தெளிவாகவும்** இருக்கிறதா? என 'செக்' பண்ணுங்கள். சுத்தமாகவும் இருக்க வேண்டும். தெளிவாகவும் இருக்க வேண்டும். அதற்காக, குறித்த நேரத்தில் வெற்றி பெறுவதற்காக, மனம் மற்றும் புத்தியில் 'டச்சிங் பவர்' மற்றும் 'கேட்சிங் பவர்' இருப்பது மிகவும் அவசியமாகும்.

**41.** 'டிரில்' நினைவில் இருக்கிறதா! மறந்து விடவில்லையே. ஏனெனில் வருங்காலம் மிகக்கொடுமையாக இருக்கும் என்பது பாப்தாதாவிற்குத் தெரியும். நீங்கள் எல்லோருக்கும் சக்திகளின் 'சகாஷ்' கொடுக்க வேண்டியிருக்கும். மேலும் சக்திகளை கொடுப்பதே நீங்கள் உங்களுக்காகச் செய்யும் தீவிர முயற்சியாக இருக்கும். கொஞ்ச நேரத்திற்குள் 'சகாஷ்' தருவதன் மூலம் எல்லா சக்திகளையும் கொடுக்க வேண்டியதாக இருக்கும் மேலும் அந்த மாதிரி இக்கட்டான நேரத்தில் ஆற்றலைக் கொடுப்பீர்கள், எத்தனை பேருக்குக் கொடுப்பீர்கள்?. கொஞ்சம் பேருக்கோ, நிறைய பேருக்கோ எத்தனை பேருக்கு? கொடுக்கிறீர்களோ அத்தனை

பேர்களே துவாபர மற்றும் கலியுகத்தில் உங்களுக்கு பக்தர்கள் ஆவார்கள். எனவே சங்கமயுகத்தில் ஒவ்வொரு பக்தரும் உருவாகிறார்கள். ஏனெனில், கொடுக்கப்பட்ட சுகம் மற்றும் அமைதி அவர்களது உள்ளத்தில் கலந்துவிடுகிறது, பின்னர் அவர்கள் பக்தியின் ரூபத்தில் அதைத் திரும்பக் கொடுப்பார்கள். 20/10/1998

**42.** பாப்தாதா அவர்கள் தற்போதய நேரத்தில் குழந்தைகள் உங்கள் ஒவ்வொருவரையும் எந்த ரூபத்தில் பார்க்க விரும்புகிறார்கள்? தற்போது நேரத்தின் போக்கு எதிர்பாராத விளையாட்டைக் காட்டிக் கொண்டிருக்கிறது. எனவே பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பாபாவிற்குச் சமானமாகப் பார்க்க விரும்புகிறார். ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் பாபாவின் வடிவம் வெளிப்பட வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் கண்களிலும் ஆன்மீகத்தின் போதை இருக்க வேண்டும். ஒவ்வொருவர் முகத்திலும் அனைத்து பிராப்திகள் நிறைந்த புன்முறுவல் இருக்க வேண்டும், ஒவ்வொருவர் நடத்தையிலும் நம்பிக்கையின் போதை இருக்க வேண்டும். 15/11/2008

**43.** பவித்திர ஆத்மாக்களின் மனம், சொல், செயல், உறவு, பழக்கம் எல்லாம் இயல்பாகவே சக்திசாலியாக இருக்கும். உணர்வை மாற்ற விரதமேற்று விட்டீர்கள் அப்படி இருக்க 'அவ்வப்போது' என்பது ஏன்? நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், நேரத்தின் புகார், பக்தர்களின் புகார், ஆத்மாக்களின் புகார்களை கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் மேலும் எதிர்பாரா (அசானக்) நிகழ்வின் பாடமும் எல்லோரிடமும் நன்றாக இருக்கிறது அப்படி இருக்க அஸ்திவாரம் பலவீனமாக இருக்கிறது என்றால் பவித்திரம் பலவீனமாக இருக்கிறது என்று அர்த்தம். ஒருவேளை சொல்லில்கூட சுபபாவனை, சுப ஆசை இல்லையென்றால் பவித்திரத்தில் விருப்பமில்லாமல் இருக்கிறது. அப்படி என்றால் சம்பூரண பவித்திரத்தின் சுகமாக இருக்கக்கூடிய அதீந்திரிய சுகத்தின் அனுபவத்தைப் பெறவேமுடியாது. நடக்க முடியாததை நடத்திக் காட்டுவதே பிராமண வாழ்க்கையின் இலட்சியமாக இருக்கிறது. 30/11/1998.

**44.** தனது சார்ட்டை பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் அல்லவா. ஒருகால் இப்போது வரைக்கும் இரண்டு ராஜ்ஜியங்கள் இருக்குமானால் ஒரு ராஜ்ஜியத்தின் அதிகாரியாக எப்போது ஆவீர்கள்? ஸ்ரீமத் கூடவே மாயாவின் ஆலோசனையும் கலந்து விடுகிறதா என்ன? அதே போல ஒரு தர்மம். ஒரே ராஜ்ஜியமாக இருக்கும்போது ஒரே தர்மமாகவும் இருக்கும். **தர்மம் என்றால் தாரணை**. எனவே உங்கள் விசேச தாரணை எது? பவித்திரத்தின் தாரணை. எனவே மனம், சொல், செயல், உறவு, நட்புகளில் எப்போதும் முழுமையாக இருக்கிறேனா மேலும் பவித்திரத்தின் குணம் என்னுடைய இயல்பாகி விட்டதா? என செக் செய்யுங்கள். 15/12/2008

**45.** இன்றுகூட விதவிதமான வர்க்கங்களில், விதவிதமான இடங்களில் செய்த சேவையின் நல்ல முடிவுகளை பாப்தாதா அவர்கள் பார்த்தார்கள். ஆனால் அசரீரி ஆகக்கூடிய வாயுமண்டலம் குறைந்த முயற்சியில் அதிக பிரபாவத்தை ஏற்படுத்தக் கூடியது, காதால் கேட்பது நன்றாக இருக்கிறது எனினும் வாயுமண்டலத்தின் மூலமாக அசரீரி ஆகக்கூடிய 'திருஷ்டி' மூலமாக எந்த அனுபவம் பெறுகிறார்களோ, அந்த அனுபவம் மறக்க முடியாதது. எனவே **பரிஸ்தாவாக வேண்டும் என்ற ஆர்வம் இப்போது சேவையில் விசேசமாக அதிகமாக சேருங்கள்**. அமைதியினுடைய, சுகத்தினுடைய, ஆன்மீக அன்பினுடைய ஏதாவது அனுபவத்தை பெறச் செய்யுங்கள். 04/02/2009

**46.** சங்கமயுகத்தின் இலட்சியம் என்ன? நம் அனைத்து ஆத்மாக்களின் தந்தை வந்துவிட்டார், ஆஸ்தியோ பாபா மூலமாகக் கிடைக்குமல்லவா! அதன் பிரபாவம் பரிஸ்தா நிலையில் இருப்பதன் மூலமாக வாயுமண்டலத்தில் பரவும். அவர்களுடைய 'திருஷ்டி' யிலிருந்து சுபமான அலைகளைப் பெறுகிறோம், இவர்களுடைய திருஷ்டியில் ஆன்மீகத்தின் ஒளி தென்படுகிறது என அனுபவம் செய்வார்கள். எனவே இப்போது நான் 'டபுள் லயிட்' பரிஸ்தாவாக இருக்க வேண்டும் என்பதை தீவிர முயற்சி செய்வதற்கான இலக்காகக்கொள்ளுங்கள், நடமாடும் பரிஸ்தா சொரூபத்தின் அனுபவத்தை அதிகமாக்குங்கள். அசரீரி ஆகுவதன் அனுபவத்தை

அதிகமாக்குங்கள். எந்தவொரு எண்ணத்தையும் நொடியில் முடித்து விடுங்கள், சமஸ்கார சுபாவத்தில் 'டபுள் லயிட்' ஆகுங்கள்!

**47.** ஒவ்வொரு குழந்தையும் எல்லாம் நிறைந்தவராக இருக்க வேண்டும் என்றே பாப்தாதா விரும்புகிறார்கள் எனவே ஒவ்வொருவரும் தமது கணக்கைப் பாருங்கள். யாருக்கு எந்த அளவு பொக்கிஷம் நிறைந்திருக்கிறதோ அது அவருடைய கண்களில், நடத்தையில், முகத்தில் தெரிய வருகிறது, அவர்களுடைய முகம் மற்றும் நடத்தை மலர்ந்த ரோஜாவைப்போல இருப்பதைக் காணலாம். ஒவ்வொருவரின் முகம் மற்றும் நடத்தையில் எந்த அளவு சந்தோஷம் இருக்கிறது எந்த அளவு உற்சாகம் இருக்கிறது, கண்களில் ஆன்மீகமும், முகத்தில் புன்னகையும், செயலில் ஒவ்வொரு குணமும் அனைவருக்கும் அனுபவமாகிறதா என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். எனவே ஒவ்வொருவரும் தம்மைத்தாமே 'செக்' செய்யுங்கள் 24/03/2009

**48.** இன்றைய நேரப்படி உலகில் உள்ள ஆத்மாக்களுக்கு மகிழ்ச்சி, சக்தி மற்றும் அன்பு தேவைப்படுகிறது. ஆன்மீக அன்பை விரும்புகிறார்கள். எனவே பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் இப்போது நேரத்திற்குத் தக்கபடி வள்ளளாகுங்கள். **மனதால் சக்திகளைக் கொடுங்கள், வார்த்தையால் ஞானத்தைக் கொடுங்கள், மேலும் செயலால் குணதானம் கொடுங்கள்.** பிரம்மாபாபா அவர்கள் கடைசியில் மூன்று வார்த்தைகளை அனைத்து குழந்தைகளுக்கும் பரிசாக கொடுத்திருந்தார், அவைகள் நினைவில் இருக்கிறதா. அந்த மூன்று வார்த்தைகளையும் நீங்கள் சேவையில் உபயோகப் படுத்தினால் நிறைய ஆத்மாக்களை திருப்திப் படுத்த முடியும். அந்த மூன்று வார்த்தைகள் **- நிராகாரி, நிரகங்காரி, மற்றும் நிர்விகாரி.** எனவே **மனதில் நிராகாரி, வார்த்தையில் நிரகங்காரி மற்றும் செயலில் நிர்விகாரி.** இந்த மூன்று வார்த்தைகளையும் சேவையில் ஈடுபடுத்துங்கள். 21/03/2009

**49.** பரமபிதா பரமாத்மா குழந்தைகள் உங்களிடமிருந்து எதை விரும்புகிறார் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். எனது ஒவ்வொரு குழந்தையும் பாபாவிற்குச் சமானமாக வேண்டும் என்பதே ஒவ்வொரு குழந்தைமீதும் பாபா கொண்டிருக்கும் விருப்பமாகும். எப்படி பாபாவோ அப்படி குழந்தைகளுடைய நிலையும் சிறந்ததாக இருக்க வேண்டும். முழுமையான பவித்திர நிலையே அந்த சிறந்த நிலை. அப்படிப்பட்ட பவித்திர நிலையில் கனவில்கூட அபவித்திரம் வரமுடியாது. அப்படிப்பட்ட பவித்திரநிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறீர்களா? அந்த முழுமையான பவித்திரத்தில் அபவித்திரத்தின் பெயரடையாளம் எதுவும் தெரியக்கூடாது.

**50.** இன்று பாப்தாதா **நொடியில் முற்றுப்புள்ளி** அதாவது மனம் ஒருமுகப்படும் நிலையை **பயிற்சி செய்வதன்மீது கவனத்தை ஈர்க்க விரும்புகிறார்**. ஏனெனில் இயற்கையானது தனது விதவிதமான வண்ணங்களை காண்பிக்க ஆரம்பித்துவிட்டது, நாலாபுறமும் என்ன என்ன நடந்துகொண்டிருக்கிறது. அதை நீங்கள் எல்லோரும் அதிகமாகத் தெரிந்திருக்கிறீர்கள். அந்த மாதிரி மனம் புத்தியை அலைக்கழிக்கும் விசயங்கள் வந்தே தீரும். எனவே மனதை, புத்தியை நீங்கள் ஒரு நொடியில் பரந்தாமத்தில் நிலை நிறுத்துவதற்கான பயிற்சியை இப்போது செய்யுங்கள். 28/02/2010

**51.** இப்போது எல்லோரும் ஒரு நொடியில் தனது பரிஸ்தா ரூபத்தில் நினைவை நிறுத்துங்கள் … பிராமணனாகிய நான் இப்போது மாஸ்டர் சர்வ சக்திவான் நிலையில் இருக்கிறேன் … இந்த மாஸ்டர் சர்வசக்திவான் நிலையில் நிலையாக இருங்கள் … (பாப்தாதா டிரில் செய்ய வைத்தார்). அந்தமாதிரி பயிற்சியை நாள் முழுவதும் எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ அப்பொழுது மனதை ஒரு நிலைப் படுத்தி அடிக்கடி செய்து பாருங்கள். எங்கு வேண்டுமோ, எப்படி வேண்டுமோ, அங்கே மனதை ஒருமுகப் படுத்துங்கள். நொடியில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் ஏனெனில் அப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலை வருவதற்க்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன, எனவே **'மைண்ட் கண்ட்ரோல்'**. மனம் என்னுடையது, **நான் மனமல்ல, மனம் என்னுடையது என்றால், எனது என்பதன் மீது ஆத்மாவின் கண்ட்ரோல் இருக்கிறதா? இந்த 'டிரில்' மிகவும் அவசியமாகும்.** 28/02/2010

**52.** நாள் முழுவதும் எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ, அப்போது மனசேவையை அதிகமாகச் செய்யுங்கள் ஏனெனில் குழந்தைகள் நீங்கள் தான் சுகமயமான உலகைக் கொண்டுவர வேண்டும். **பாபா அவர்கள் குழந்தைகள் உங்களை இந்த சேவைக்காகவே 'ரைட்ஹேண்ட்' ஆக்கியிருக்கிறார்.** கையினால் கொடுக்கப்படுகிறது அல்லவா. அப்படி நீங்கள் பாபாவின் 'ரைட்ஹேண்டாக' இருக்கிறீர்கள். பாப்தாதா அவர்கள் 'ரைட் ஹேண்ட்' அதாவது கைகளாகிய உங்கள் மூலமாக எல்லோருக்கும் ஏதாவது கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று சேவை கொடுக்க விரும்புகிறார். அவர்கள் கொடுங்கள், கொடுங்கள் என கத்திக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் துக்கப் படுவோருக்கு சுகம் கொடுத்து, கவலைப் படுவோருக்கு கொஞ்சம் சக்தி கொடுத்து புண்ணிய காரியம் செய்யுங்கள். 31/12/2010

**53.** பழைய சமஸ்காரங்களே உங்களை கீழே கொண்டு வருவதற்கு காரணமாக இருக்கிறது என்பதை பாப்தாதா அவர்கள் கண்டறிந்தார்கள். சமஸ்காரத்தை அழிந்து விட்டீர்கள் எனினும் ஏதாவது சமஸ்காரம் பழக்க வடிவில் இப்போது கூட காரியத்தை செய்ய வைத்து விடுகிறது. எப்படி தேகாபிமானத்தின் பழக்கம் இயல்பாகி விட்டதோ அப்படி ஆத்ம அபிமானி நிலையின் பழக்கம் இன்னும் இயல்பாகவில்லை. நாங்கள் அழித்துவிட்டோம் என்று சொல்கிறீர்கள், எனினும் முற்றிலுமாக விதையை எரித்து சாம்பலாக்கவில்லை எனவே நேரம் வரும்போது மீண்டும் அந்த தேகவுணர்வின் சமஸ்காரம் வெளிப்பட்டு விடுகிறது. இப்போது இந்த தேகவுணர்வின் பழக்கத்தை, பவர்புல் ஆத்ம அபிமானத்தின் சக்தியைக் கொண்டு, வம்சத்தோடு அழிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. **எல்லையற்ற வைராக்கிய உணர்வு வரும்போதே அவைகள் அழிந்துபோகும்.** 02/04/2009

**54.** இப்போது ஆத்மாக்களுக்கு 'எக்ஸ்ட்ரா' சக்தி தேவைப்படுகிறது. அது மனசா சேவை மூலமாக தருவது, தைரியம் கொடுப்பது, ஊக்க உற்சாகம் கொடுப்பது ஆகியவையாக இருக்கிறது. எனவே இந்த நேரத்தில் டபுள் சேவை செய்வது அவசியமாக இருக்கிறது, அதற்காக ஒவ்வொரு குழந்தையும் தன்னை மனிதகுலத்தின் முன்னோடியாக உணர வேண்டும். ஆத்மாக்கள் நீங்கள் தான் இந்த கல்ப மரத்தின் வேரான முன்னோடிகளாகவும், பூஜைக்குரியவர்களாகவும் இருக்கிறீர்கள். பாப்தாதா அவர்கள் துக்கப்படும் குழந்தைகளின் சப்தத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார், குழந்தைகள் உங்களிடம் அவர்களுடைய புகார் செய்யும் சப்தம் வந்து சேரவேண்டும். நீங்கள் எந்த அளவு சம்பூரண பவித்திர ஆத்மா ஆகிறீர்களோ, அதோடுகூட இந்த மனசா சேவையையும் அதிகப் படுத்த வேண்டும். 15/03/2010

**55.** நீங்கள் நடமாடுகிறீர்கள், பிறரோடும் இருக்கிறீர்கள், யாருடனாவது ஏதாவது சேவையும் செய்கிறீர்கள், அப்போது ஒருவர், பிறரை ஆத்ம ரூபத்தில் பாருங்கள் என பாப்தாதா சைகை கொடுக்கிறார். ஆத்ம ரூபத்தில் பார்க்கவும் செய்கிறீர்கள், அதற்கான பயிற்சியும் செய்கிறீர்கள், எனினும் எப்போது நீங்கள் ஆத்மாவைப் பார்க்கிறீர்களோ அப்போது ஆத்மாவின் **உண்மையான சமஸ்காரங்களோடு** பார்க்கிறீர்களா? அல்லது கலவையான சமஸ்காரம் எதுவோ அதுவும் தெரிகிறதா? ஆத்மாவைப் பார்ப்பதில் பாஸாகிவிட்டீர்கள் ஆனால் எந்த சமஸ்காரத்தோடு தொடர்பில் வருகிறீர்கள்? அல்லது தற்போதய சமஸ்காரமும் முன்னால் வருகிறதா? 31.03.2010

**56.** இன்றிலிருந்து எந்த ஒருவரையும் ஆத்ம ரூபத்தில் பாருங்கள், ஆனால் ஆத்மாவின் உண்மையான சமஸ்காரம் எதுவோ அந்த ரூபத்தில் பாருங்கள் என்று பாபா சொல்கிறார். அப்போது, எப்போதாவது உருவாகும், அவ்வப்போதய விசயங்கள் இல்லாமல் போய்விடும். சிலவேளை ஆத்ம ரூபத்தில் பார்க்கிறீர்கள் எனினும் அதோடு கூடவே தற்போதய சமஸ்காரமும் வந்துவிடுகிறது. எனவே எந்த சம்பூரண உறவுநிலை தங்களுக்குள் இருக்க வேண்டுமோ அது தூரப் போய்விடுகிறது. எனவே ஆத்மாவை உண்மையான சமஸ்காரத்தோடு பாருங்கள். அப்போது ஒன்றாக இருப்பதில், எவைகளெல்லாம் இப்போது உங்களுக்கு தடைகளை ஏற்படுத்துகிறதோ, அவைகள் இல்லாமல் போய்விடும். 01/03/2010

**57.** இன்று எப்போதும் சந்தோஷமாக இருப்பேன் என நினையுங்கள். அவ்வப்போது மகிழ்ச்சி உடையவராக இருக்கக்கூடாது. எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். யார்

உங்களைப் பார்த்தாலும் உங்கள் முகத்தைப் பார்க்கும்போது இவர் பெரிய பாக்கியசாலி ஆத்மாவைப் போல தெரிகிறார் என நினைக்க வேண்டும். உங்கள் பாக்கியம், முகம் மற்றும் நடத்தையில் வெளிப்பட வேண்டும். மனதில் மட்டும் நிறைய இருக்கிறது என்பது கூடாது. உங்கள் பாக்கியசாலி முகம், மலர்ந்த முகம், மற்றவருக்கு அறிமுகம் கொடுக்க வேண்டும். முகம் ஏதாவது சொல்ல வேண்டும். உங்கள் முகம் சேவை செய்ய வேண்டும். பாபா வரை கொண்டுவர வேண்டும். சந்தோஷமாக இருக்க வேண்டும், இதுவும் சேவையின் சாதனமாக இருக்கிறது. 02/03/2011

**58.** உங்கள் முகத்தின் மூலமாக, சொல்லின் மூலமாக, நடத்தையின் மூலமாக, பார்வையின் மூலமாக, பாபாவின் நினைவு பார்ப்பவருக்கு தானாகவே வர வேண்டும். உங்கள் அனைவரையும் இப்போது பாபா பார்த்தபோது, தான் தனது முகம் அல்லது சொல் அல்லது செயல் மூலமாக பாபாவை வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் பெரும்பாலோரிடம் இருப்பதை அறிந்தார். அப்படியானால் தந்தையைப் பின்பற்றுங்கள். பிரம்மா பாபா அவர்கள் முகத்தால், நடத்தையால், உணர்வால், எண்ணத்தால் எப்போதும் பாபாவை வெளிப்படுத்தி வந்தார், அப்படி நீங்களும் செய்யுங்கள். 03/04/2011

**59.** விசேசமாக, உங்கள் கண்களில், முகத்தில், நடத்தையில் பாப்தாதாவோடு கலந்திருப்பதை வெளிப் படுத்துங்கள். உங்கள் ஒவ்வொரு வார்த்தையிலும் ‘கற்றுக்கொடுப்பவரை’, ‘கேட்பவர்’ அனுபவம் செய்ய வேண்டும். நீங்கள் எவைகளை எல்லாம் சொல்கிறீர்களோ அவைகளில் இருந்து இவருக்கு ‘கற்றுக் கொடுப்பவர்’, இவரிடம் சக்தியை நிறப்புபவர், சர்வசக்திவான் தந்தை, பகவான் என்பதையும், இவர் பகவானின் குழந்தை, பகவானின் மாணவர், பகவானைப் பின்பற்றும் தொண்டனல்ல, ஆனால் ஒவ்வொரு அடியிலும் பலகோடிகளை உருவாக்கக்கூடியவர், என்பதையும் பிறர் உணரவேண்டும். 03/04/2011

**60.** இப்போது மனதின் மூலமாக அனேக ஆத்மாக்களுக்கு சுகத்தின் கிரணங்களை, அமைதியின் கிரணங்களை, மகிழ்ச்சியின் கிரணங்களை, அன்பின் கிரணங்களை அனுப்புங்கள், இந்தச் சேவைகளை ஒன்றாகச் செய்யுங்கள். தன்னுடைய சமஸ்காரத்தை மாற்றுவதில் அல்லது பிறருடைய சமஸ்காரங்களை மாற்றுவதற்கு உதவி செய்வதில் பலருக்கு நேரம் அதிகமாக செலவாகிறது. ஆனால் மனசாசேவை மூலமாக விதவிதமான கிரணங்களை ஆத்மாக்களுக்கு கொடுக்க வேண்டும். இதற்கான கவனம் போகப்போக மிக அவசியமாக இருக்கும். அதன்மீதும் கவனம் கொடுத்துக்கொண்டே இருங்கள். 24/10/2010

**61.** இப்போது பாப்தாதா புதியவராக இருந்தாலும், பழையவராக இருந்தாலும் எல்லோருக்கும் ஒரு நொடிக்கான வேலை தருகிறார். எல்லோரும் இப்போது ஒரு நொடியில் … தன்னைத்தான் தனது எல்லா எண்ணங்களில் இருந்தும் விலகி ஒரு நொடியில் தன்னை பிந்து ரூபத்தில் நிலைநிறுத்த முடியுமா … செய்வீர்களா? **ஒரு நொடியில் … நான் பிந்துவாக இருக்கிறேன், வேறு எந்த எண்ணமும் இல்லாமல் நான் பிந்துவாக இருக்கிறேன் … நொடியில் தன்னை பிந்து ரூபத்தில் நிலைநிறுத்தினீர்களா எனப் பாருங்கள்.** நொடியில் செய்தீர்களா. முழு நாளில் மணிக்கொரு முறை தன்னை ஒரு நொடியில் பிந்து ரூபத்தில் நிலை நிறுத்துங்கள். இந்தப் பயிற்சியை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். தனது காரியங்களை செய்து வந்தபோதும், நொடியில் பிந்து ரூபத்தில் நிலைநிறுத்துவதில் வெற்றி கிடைக்கிறதா? எனப் பாருங்கள் 31/12/2010

**62.** மனதை சக்திகளின் கடிவாளத்தைக் கொண்டு எப்படி செலுத்த விரும்புகிறீர்களோ அப்படி செலுத்துங்கள். இப்போது இதைத்தான் பாப்தாதா அவர்கள் விரும்புகிறார்கள். **மனதை வென்றவர் உலகை வென்றவர்** என யாருக்காக புகழ் பாடப்படுகிறது. இது குழந்தைகள் உங்களுடைய புகழாக இருக்கிறது, ஒவ்வொரு கல்பமும் செய்திருக்கிறீர்கள் அதனால் புகழ் இருக்கிறது, ஏனென்றால் மற்ற கர்மேந்திரியங்களை எப்படி என்னுடையது என்று சொல்கிறீர்களோ அதேபோல மனதையும் என்னுடையது என்றுதான் சொல்கிறீர்கள். என்னுடையது என்று சொன்னால் நீங்கள் அதன் அதிபதியாக ஆகிறீர்கள். மனதில் எந்த எண்ணங்களை நினைக்க

விரும்புகிறீர்களோ, எவ்வளவு நேரம் நினைக்க விரும்புகிறீர்களோ அதன்படி நடக்க அது கட்டுப்பட்டிருக்கிறது. ஏனெனில் அது என்னுடையது. 18.01.2011

**63.** சம்பூரண நிலையை நெருங்கி வந்துவிட்டதன் அடையாளமாக முதலில் மதுரமான சொற்களின் ரேகைகள் பிரகாசிக்கிறது. உதடுகளில் இனிய புன்னகையின் ரேகைகள் பிரகாசிக்கிறது. உள்ளத்தில் உள்ளத்திற்கு இதம் தரும் பாபாவின் அன்பு நிறைந்த ரேகைகள் பிரகாசிக்கின்றன. கைகளில் அனைத்து பொக்கிஷ சிறப்புகளின் ரேகைகள் பிரகாசிக்கின்றன. கால்களில் ஒவ்வொரு அடியிலும் கோடி மடங்கின் ரேகைகள் பிரகாசிக்கின்றன. இப்படிப்பட்ட பாக்கியம் யாருக்கு கிடைத்திருக்கிறது என்பதை இப்போது யோசியுங்கள். எனவேதான் உங்கள் நினைவுச்சின்ன சித்திரங்களுக்கும் பாக்கியத்தை வர்ணனை செய்து கொண்டே இருக்கிறார்கள். இந்த பாக்கியத்தை சுயம் பாக்கியவிதாதா அவர்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் தந்திருக்கிறார். 2.2.2010

**64.** இப்போது பாப்தாதா ஐந்து நிமிடத்திற்கு எல்லோரையும் ஒரு 'டிரில' செய்ய வைக்கிறார். தனது மனதின் சக்தியால், திருஷ்டியில் உங்கள் பக்தராக அல்லது துக்க அசாந்தியுடைய ஆத்மாக்கள் யாரெல்லாம் ஏ! எங்களுடைய முன்னோரே, எங்களுக்கு கொஞ்ச நேரமாவது அமைதி கொடுங்கள், கொஞ்சமாவது சுகத்தின் அஞ்சலி கொடுங்கள், எங்களை காப்பாற்றுங்கள் என உங்களை நினைவு செய்கிறார்களோ, அப்படிப்பட்ட ஆத்மாக்களை இங்கு அமர்ந்தபடியே மனக்கண்ணில் கொண்டுவாருங்கள், சப்தங்கள் உங்கள் காதுகளில் கேட்கிறதா! காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என கூச்சலிடும் ஆத்மாக்களுக்கு தனது மனதின் சக்தி மூலமாக சுக-சாந்தியின் கதிர்களை அனுப்புங்கள். இந்த மனதின் சேவையை முழுநாளும் அடிக்கடி செய்துகொண்டே இருங்கள். ஏனெனில் பாபாவோடு கூடவே குழந்தைகள் நீங்களும் உலக சேவகராக இருக்கிறீர்கள். 17.02.2011

**65.** நாள் முழுவதும் எப்படி வார்த்தை மூலமாக சேவை செய்ய நிமித்தமாக இருக்கிறீர்களோ அப்படி இடையிடையே மன சேவையையும் பயிற்சி செய்துகொண்டே இருங்கள். இதனால் தனக்கும் நன்மை உண்டாகிறது. ஏனெனில் உங்கள் மனம் எப்போதும் சேவையில் 'பிஸியாக' இருக்கும்போது, இடையிடையே கெட்ட எண்ணங்கள் அல்லது வீணான எண்ணங்களை மாயா கொண்டு வருகிறதல்லவா அதிலிருந்து தப்பித்து விடுகிறீர்கள். மேலும், இந்தப் பயிற்சியின் மூலமாக 'மாயாஜீத், 'மன்ஜீத்,' 'ஜகத்ஜீத்', ஆகிய சமஸ்காரங்களை நீண்ட காலத்திற்கு உரியதாக்குகிறீர்கள், அப்போது கடைசி நேரத்தில் இந்த நீண்டகால பயிற்சியானது வெற்றி பெறச்செய்து உங்களை விசேசமாக மாலையின் மணியாக்கிவிடும். 17.02.2011

**66.** பாப்தாதா ஒவ்வொரு குழந்தையிடமும் எதை விரும்புகிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒவ்வொரு குழந்தையும் பாபாவிற்கு சமானமாக எல்லாம் நிறைந்தவராகவும், முழுமைபெற்றவராகவும் ஆகவேண்டும் என்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் மீதும் சுபபாவனை வைத்திருக்கிறார். இப்போது நேரமும் உங்களுக்கு ஒத்துழைப்பு தருகிறது. எனவே ஒவ்வொருவரும் தனது மனதிற்காகவும் தனக்காகவும் சிலவற்றை விடவேண்டும் இன்னும் சிலவற்றில் முன்னேற வேண்டும் என புது திட்டங்களை தீட்டியிருக்கிறீர்கள் அல்லவா! எனவே ஒவ்வொரு குழந்தையும் தனது பழைய சமஸ்காரத்திற்கு ஈமச்சடங்கு செய்துவிடுங்கள். நீங்கள் எல்லோரும் இந்த எண்ணத்தை நிறைவேற்ற விரும்புகிறீர்கள் அல்லவா! ஏனெனில் எந்த பழைய சமஸ்காரத்தை தனது 'நேச்சர்' என்று சொல்கிறீர்களோ அந்த பழைய சமஸ்காரத்திற்கு இப்போது ஈமச் சடங்கு செய்ய வேண்டும். அதாவது அவைகளை யோக நெருப்பில் சாம்பலாக்கிவிடுங்கள். 31.12.2011

**67.** யார் உங்கள் முகத்தைப் பார்த்தாலும், உங்கள் முகத்தில் பரிஸ்தா ரூபம் தெரிய வேண்டும். இப்படிப்பட்டவர், அப்படிப்பட்டவர் என்பது தெரியக்கூடாது. பரிஸ்தா அவர்களுக்கு அனுபவமாக வேண்டும். அதற்காக எரிமலை யோகம் செய்ய வேண்டும். லயிட் மற்றும் மயிட் சொரூப யோகத்தில் வீணானவைகளை எரித்துவிடுங்கள். யார் உங்களைப் பார்த்தபோதும்

அவர்களுக்கு சக்திமிக்க பரிஸ்தா தெரிய வேண்டும். எனவே அமிர்தவேளை தனது தினசரி நடவடிக்கைகளை திட்டமிடும்போது நான் பிராமணனில் இருந்து பரிஸ்தாவாகியிருக்கிறேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். 31.12.2011

**68.** மெஜாரிட்டி குழந்தைகள் எல்லைக்குட்பட்ட எனது என்பதை உனது என மாற்றிவிட்டதை பாப்தாதா அவர்கள் பார்த்தார்கள், அதனால் என்னவாகிவிட்டீர்கள்? **கவலையற்ற மகாராஜா,** எனவே இன்று பாப்தாதா குழந்தைகளை கவலையற்ற மகாராஜா ரூபத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறார். பக்திமார்க்கத்தில் உங்களுடைய சித்திரங்களை உருவாக்கி இருக்கிறார்கள். அதில் **இரண்டு கிரீடங்களைக் காட்டுகிறார்கள். ஒன்று ஒளிகிரீடம் அது கவலையற்ற ஆத்மாவின் அடையாளமாக நெற்றியில் ஒளி பிரகாசிக்கிறது. இன்னொறு கிரீடம் விகாரத்தை வென்றதற்காக கொடுக்கப்பட்டுள்ளது**. எனவே பவித்திரத்திற்கான கிரீடத்தை காட்டி இருக்கிறார்கள், எனவே எப்போது பாபா உங்கள் கவலைகளை எடுத்துக்கொண்டு ஆன்மீக போதையைத் தந்திருக்கிறாரோ அப்போது நீங்கள் என்னவாகிவிட்டீர்கள்? கவலையற்ற மகாராஜா. 14.12.2011

**69.** நேரத்திற்குத் தக்கபடி சேவைமீது எவ்வளவு ஊக்க உற்சாகம் இருக்கிறதோ அதே அளவு இப்போது தீவிர முயற்சி செய்பவர் ஆவது மற்றும் ஆக்குவது, அனைத்தும் நிறைந்தவர் ஆவது மற்றும் ஆக்குவது ஆகியவற்றில் தானும் ஊக்க உற்சாகத்தோடு இருக்க வேண்டும் மேலும் நீங்கள் இருக்கின்ற சூழ்நிலையிலும் அந்த ஊக்க உற்சாகத்தை தோற்றுவிக்க வேண்டும். ஒருவர் பிறருக்கு சகயோகியாகி இப்போது வாயுமண்டலத்தில் தீவிர முயற்சியின் அலைகளைப் பரப்புங்கள். எப்படி ஒருவர் பிறரிடம் சேவையின் வாயுமண்டலத்தைப் பரப்புகிறீர்களோ அப்படி இப்போது இந்த அலைகளை வாயுமண்டலத்தில் பரப்ப வேண்டும் என பாப்தாதா குழந்தைகள்மீது சுபபாவனை வைத்திருக்கிறார். 18.1.2012

**70.** எதை எரிமலை யோகம் என்று பாப்தாதா சொன்னாரோ அதன்மீது இப்போது இன்னும் ஆழமான கவனம் கொடுக்க வேண்டும். எல்லோரும் முயற்சி செய்கிறீர்கள் எனினும் இப்போது அந்த முயற்சிக்கு முன்னால் தீவிரம் என்ற வார்த்தையை சேருங்கள். இதன்மீது எந்த அளவு கவனம் கொடுக்கிறீர்களோ அந்த அளவு அந்த கவனத்தின்கூடவே பாப்தாதாவும் உங்களுக்கு அதிகப்படியான உதவி செய்வார்கள். மனதின் அதிபதியாக இருந்து மனதை நடத்துங்கள். எப்படி கை கால்களை நடத்துகிறீர்கள் அப்போது எதை விரும்புகிறீர்களோ அதைச் செய்கிறீர்கள். இப்போது நீங்கள் விரும்பினால் இங்கே வேண்டாம் அங்கே வைக்க வேண்டும் என்றால் வைக்க முடிகிறது அல்லவா! அதேபோல மைன்ட் கண்ட்ரோல், எதை விரும்புகிறீர்களோ அதை மனம் நினைக்க வேண்டும். இன்று மனதின்மீது எந்த அளவு ரூலிங் பவர் மற்றும் கண்ட்ரோலிங் பவர் இருந்தது? என்று தினசரி இரவில் ரிசல்டைப் பாருங்கள். 18.01.2012

**71.** பழையவர்களாக இருந்தாலும் சரி புதியவர்களாக இருந்தாலும் சரி யாராக இருந்தாலும், இடையிடையே நேரம் ஒதுக்கி முழுவதும் அசரீரி ஆவதற்கான டிரில் கட்டாயம் செய்ய வேண்டும் என்று பாப்தாதா அனைவருக்கும் சொல்கிறார், ஏனெனில் வரக்கூடிய நேரத்தில் ஒரு நொடிப் பொழுதிற்குள் அசரீரி ஆக வேண்டி இருக்கும். எனவே இந்த டிரில்லை செய்வதற்கு நேரம் கிடைப்பதில்லை என யாராவது சொன்னால், ஒருவர் எவ்வளவுதான் பிஸியாக இருந்தாலும் தாகமெடுத்தால், தண்ணீர் குடிக்க எழமாட்டீர்களா. அவசியம் என உணர்ந்து எழுவீர்கள் இல்லையா. எனவே அசரீரியாகக்கூடிய ஒரு நிமிட டிரில்லை அவசியம் பயிற்சி செய்ய வேண்டும். கடைசி நேரத்தில் பயிற்சி செய்ய முடியாது. இப்போது நேரம் கிடைத்திருக்கிறது, ஒரு நொடியில் நான் ஒரு ஆத்மா என்பதை உறுதி செய்யுங்கள். ஆத்ம சொரூபத்தில் நிலையாக இருக்க வேண்டும். தேக உணர்வு தன்பக்கம் இழுக்கக்கூடாது. எல்லோரும் இந்தப் பயிற்சியை செய்ய வேண்டும். 20.5.2012

**72.** குழந்தைகள் எப்போதும் மனதை பிஸியாக வைத்திருக்க வேண்டும் என்று பாப்தாதா விரும்புகிறார். விரும்பினால் முரளியை சிந்தனை செய்யுங்கள் அல்லது சேவையில் பிஸியாக இருங்கள். அவ்வப்போது இடையிடையே பாப்தாதா அவர்கள் விதவிதமான டிரில்லை கற்றுத் தந்திருக்கிறார், அவைகள் உங்களுக்கும் தெரியும். அசரீரி ஆவதற்கான டிரில், தனது மூன்று

சொருப டிரில், ஐந்து சொரூப டிரில், தெரியுமல்லவா. எப்படி பாபாவிற்கு மூன்று ரூபங்களோ அதேபோல உங்களுக்கும் மூன்று ரூபங்கள் இருக்கின்றன. பிராமணன், பரிஸ்தா மற்றும் தேவதை. டிரில் மூலமாக இந்த மூன்று ரூபத்திலும் தன்னை பிஸியாக வைத்துக் கொள்ளுங்கள் அதற்காக உள்ள மகாமந்திரம் எது? **மன்மனாபவ**. 03.4.2012

**73.** பாபா எப்போதும் குழந்தைகளை தனது துணைவர்கள் என்று சொல்கிறார். இப்போது பாப்தாதா ஒரு விசயத்தை விரும்புகிறார். ஒவ்வொரு டீச்சருடைய முகத்திலிருந்தும் பிரம்மா பாபாவிற்குச் சமமான சந்தோஷம் பார்ப்பதற்குத் தெரிய வேண்டும், நீங்கள் உள்ளே முயற்சி செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பது பிறருக்குத் தெரிந்தபோதும், உங்கள் முகத்திலிருந்து பாபா பிரத்தியட்சம் ஆக வேண்டும். யார் பார்த்தாலும் உங்களிடம் பாபாவின் பிரகாசம் தெரிய வேண்டும். இப்படி முகத்தின் மூலமாக சேவை செய்பவரே பாபாவைப் பிரத்தியட்சம் செய்வார்கள். எனவே டீச்சர்களுக்கு 'எனது பாபா' என்பது தானாகவே நினைவில் இருக்கிறது. இப்போது பாபாவை முகத்தின் மூலமாக பிரத்தியட்சம் செய்ய வேண்டும். 03.04.2012

**74.** பாபாவிடம் அன்பு இருக்கிறது அல்லவா, எனவே அன்பின் காரணத்தால் பாபா எதை சொன்னாலும் அதை செய்ய விரும்புகிறீர்கள், அதன் ரிசல்ட் பாபாவிடம் வருகிறது, ஆனால் என்ன? உறுதி குறைவாக இருக்கிறது, உறுதியைப் பயன்படுத்துங்கள். நீங்கள் எண்ணங்களை நினைக்கிறீர்கள் எனினும் **ஒன்று நினைப்பது**, மற்றது **உறுதியாக நினைப்பது**. எனவே அடிக்கடி நினைத்த எண்ணங்களில் உறுதியை கொண்டுவர வேண்டும், இந்த கவனம் குறைவாக இருக்கிறது. உறுதியே வெற்றி பெறும் சாதனமாக இருக்கிறது. எனவே இன்று என்ன செய்வீர்கள்? வெறுமனே நினைப்பீர்களா அல்லது உறுதியாக நினைப்பீர்களா. உறுதி வெற்றிக்கான சாவியாக இருக்கும்போது, அந்த சாவியை பயன்படுத்துவதில் ஏதோ குறை இருந்துவிடுகிறது, எனவே முழு வெற்றி கிடைப்பதில்லை எனவே இப்போது நல்ல காரியத்தை மனஉறுதியோடு நிறைவேற்றுங்கள். 19.02.2012

**75.** இப்போது பிரம்மாபாபாவிற்கு சமானமான எல்லாம் நிறைந்தவராகவும் (சம்பன்ன) முழுமையானவராகவும் (சம்பூரண) ஆவதற்கான அடியை **ஊக்க உற்சாகத்தோடு** தீவிரப்படுத்துங்கள். அதற்கு விசேச திட்டமிடுங்கள். ஒவ்வொரு நாளும் அமிர்த வேளையில் இருந்து இரவுவரை மனம், சொல், செயலால் எதையெல்லாம் செய்கிறீர்களோ அவைகளில் இது இருக்க வேண்டும் என்று பாப்தாதாவிற்கு சுப ஆசை இருக்கிறது. அதை செய்வது சுலபமா? முரளியை பாபா தினந்தோறும் சொல்கிறார் என்றால் பாபா சொல்வதும் நான் செய்வதும் ஒன்றாக இருக்கிறதா என ஒவ்வொருவரும் 'செக்' பண்ணுங்கள். இது ஒன்றும் கடினமல்ல ஏனெனில் ஒவ்வொருவரும் இரவில் உறங்குவதற்கு முன்பாக தனது தினசரி ரிசல்டை செக் செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது குழந்தைள் சுயம் நிறைந்தவராகி நேரத்தை அருகில் கொண்டுவர வேண்டும் என்று பாபா இப்போது விரும்புகிறார். 'வா, குழந்தையே வா, ராஜ்ஜியத்திற்கு ஒன்றாகச் செல்வோம்' என பிரம்மா பாபாவும் அழைக்கிறார். ஆத்மாக்களுக்கும் முக்தியின் கதவைத் திறந்து முக்தியின் பாகத்தை நடிக்க விடுங்கள். எவருக்கு ராஜ்ஜியம் வேண்டுமோ, எவருக்கு முக்தி வேண்டுமோ அது கிடைக்கட்டும். 18.01.2013

**76.** இப்போது என்ன செய்ய வேண்டும்? இப்போது நிறைந்தவராகவும் முழுமையானவராகவும் ஆகிவிடவேண்டும் என்பது பாப்தாதாவுடைய மற்றும் உங்களுடைய ஆசையாக இருக்கிறது. இப்போது இந்த அடியை வேகமாக எடுத்து வையுங்கள். உங்களுக்கும் பிடித்திருக்கிறது அல்லவா. தனது சகோதர சகோதரிகளின் துக்க அசாந்தியை கேட்பதற்கு நன்றாக இல்லை அல்லவா. இப்போது நீங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மற்ற விசயங்களுக்கு நேரம் கொடுக்காமல் இதற்குத் திட்டமிடுங்கள். நாலாபுறமும் சம்பன்ன மற்றும் சம்பூரணமாவதற்கான ஊக்க உற்சாகத்தை அதிகமாக்குங்கள். 18.01.2013

**77.** என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் எனக்கு சமானமாக நிறைந்தவராக வேண்டும் என்று பிரம்மா பாபாவும் விரும்புகிறார். இந்த பிரம்மாபாபாவின் ஆசையை நிறைவேற்றுவீர்கள் இல்லையா? எனவே இன்று பிரம்மாபாபா நாலாபுறமும் உள்ள குழந்தைகளின்

மீது அன்பு மற்றும் சக்தி அலைகளை, சுப எண்ண அலைகளாகப் பரப்பிக்கொண்டிருந்தார். பாபாவும் குழந்தைகள் பிரம்மா பாபாவிடம் கொண்டிருக்கும் அன்பைப் பார்த்து இன்று மலர்களை பரப்பும் நாளல்லவா, எனவே பாபாவும் சுப ஆசைகளின் மலர்களை ''சொன்னவுடன் செய்யப்பட்டது'' என்ற நம்பிக்கை மலர்களை அல்ல, ஆனால் தீவிர முயற்சியின் மலர்களை நாலாபுறமும் உள்ள குழந்தைகள் உங்கள்மீது தூவிக்கொண்டிருந்தார். 18.01.2013

**78.** பாபாவின் நினைவில் மூழ்கி இருந்து, சக்திகளின் மூலமாக மனதை கட்டுப்படுத்தி எப்போதும் மனதை வென்று உலகை வென்றவர் ஆகுங்கள். இன்று பாப்தாதா குழந்தைகளுக்கு விசேசமாக வரதானத்தை தந்துகொண்டிருக்கிறா- எப்போதும் பாபாவின் அன்பில் மூழ்கி இருந்து மனதை வென்று உலகை வென்றவராக வேண்டும். எப்போதும் மனதிற்கு அதிபதியாகி மனதை வென்றவர் ஆகுங்கள். மனதிற்கு அதிபதியாவது கடினம் என்று சிலர் நினைக்கிறார்கள், மனதை நீங்கள் என்னுடைய மனம் என்று சொல்கிறீர்கள் எப்படி மற்ற கர்மேந்திரியங்கள் என்னுடையதாக இருக்கிறபோது அது ஒவ்வொரு காரியத்தையும் கட்டுப்பட்டு செய்கிறதோ அப்படி மனதை வென்று உலகை வெல்வது ஒன்றும் கடினமான காரியமல்ல என பாபா சொல்கிறார். இன்று ஒவ்வொரு குழந்தையையும் மனதை வென்று உலகை வென்றவராக்க பாபா விரும்புகிறார். 02.02.2013

**79.** மனதை சக்திகள் மூலமாக கட்டுப்படுத்தி மனதை வென்றவராகியே தீரவேண்டும். பாப்தாதா இன்று ஒவ்வொரு குழந்தையையும் எப்போதும் மனதின் அதிபதியாக மனதை வென்று உலகை வென்றவராக்க விரும்புகிறார். என்னுடையது என்றால் என்னுடையதன் மீது அதிபதியாக இருக்கிறேன். எப்படி வேண்டுமோ அப்படி அதிபதியாகி மனதை நடத்த வேண்டும் அதன்மூலம் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். எப்படி கை கால்களை கட்டளைப்படி நடத்துகிறீர்கள். ஏனென்றால் என்னுடையது. அதேபோல மனதையும் சக்தி ரூபத்தில் இருந்து நடத்த முடியும். எனினும் அதிபதியாகி நடத்தும்போது மனதை வென்று உலகை வென்றவராகிவிடுவீர்கள். இந்த சங்கமயுக நேரத்தில் பரமாத்மா பாபா மூலமாக வரதானங்கள் கிடைக்கிறது, வரமளிக்கும் வள்ளலாகிய பாபா ஒவ்வொரு குழந்தையின் பையையும் வரங்களால் நிறைத்து விடுகிறார் அதனால் ஒரு ஜன்மத்தில் அனேக ஜன்மங்களுக்கான எதிர்காலத்தை உருவாக்க முடியும். 02.02.2013

**80.** இப்போது பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் தீவிர முயற்சி செய்பவராக பார்க்க விரும்புகிறார். தீவிர முயற்சி செய்பவர் என்றால் எல்லா பாடங்களிலும் தனது முயற்சியில் திருப்தியாக இருப்பது மேலும் இப்போது நேரத்தின்படி ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் சக்திகளும், மகிழ்ச்சியும் தெளிவாகத் தெரியவேண்டும் என பாப்தாதாவும் விருப்பப்படுகிறார், ஏனெனில் நாளுக்குநாள் உலகத்தில் துக்கம் அதிகமாகியே தீரவேண்டும். எனினும் அப்படிப்பட்ட துக்கமான நேரத்தில் உங்களுடைய மகிழ்ச்சி நிறைந்த, தெய்வீக குணம் நிரம்பிய முகத்தைப் பார்த்து அவர்களுக்கு கொஞ்ச நேரமாவது சந்தோஷம் அனுபவமாக வேண்டும். ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் அந்த ஈஸ்வரிய சினேகம், ஈஸ்வரிய அன்பு, தைரியத்தை அதிகரிக்கும். அன்பு மேலும் மகிழ்ச்சியாக இருப்பது அனுபவமாக வேண்டும். 20.02.2013

**81.** பாபா எப்போதும் தந்தையை பின்பற்றுங்கள் என்று சொல்கிறார். பாபா தம்மோடு இருப்பதால் இந்த குரூப் என்ன செய்வீர்கள்? இப்போது தத்தமது இடங்களுக்குச் சென்று தனது முகத்தின் மூலமாக அப்படிப்பட்ட மகிழ்ச்சி நிறைந்த முகத்தை அனுபவிக்கச் செய்ய வேண்டும், ஏனெனில் இன்றைய உலகத்தில் இப்போது மகிழ்ச்சி குறைந்துகொண்டே போகிறது அப்படிப்பட்ட நேரத்தில் உங்கள் முகம் அவர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்க வேண்டும். வருங்காலத்தில் துக்க அசாந்தி அதிகமாகியே தீரவேண்டும். இப்படி 'கோர்ஸ்' கொடுப்பதற்கு நேரமில்லாமல் போகும் எனினும் அந்த நேரத்தில் உங்கள் முகம் அவர்கள் மனதில் மகிழ்ச்சியை உண்டாக்க வேண்டும். 20.02.2013

**82.** பிரம்மா பாபாவிற்குச் சமானமா பரிஸ்தாவின் நிலையில் இருந்து தனது மகிழ்ச்சி நிறைந்த முகத்தின் மூலமாக அனைவருக்கும் மகிழ்ச்சியின் அனுபவத்தை ஏற்படுத்துங்கள்

மேலும் உங்களிடம் மிச்சமிருக்கும் வீண் எண்ணங்களை பிறந்தநாள் பரிசாக பாபாவிடம் கொடுத்துவிடுங்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியிலும் பிரகாசித் துக்கொண்டிருக்கும் ஒளியை பார்த்துக் கொண்டிருக்கிறார். இந்த ஒளி எல்லா ஆத்மாக்களையும் ஒளியாக்கி இந்த உலகை இருளில் இருந்து வெளிச்சத்திற்கு கொண்டுவருகிறது. இன்றைய நாளில் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையும் தனது முகத்தின் மூலமாக ஆத்மாக்களை ஒளியாக்கி இந்த வாழ்க்கையில் சதா மகிழ்ச்சியாக இருக்கும் செய்தியை கொடுக்க வேண்டும் என்பதை பாப்தாதா அனைத்து குழந்தைகளிடமும் விரும்புகிறார். இன்றைய நாளில் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையிடமும் இதைத்தான் விரும்புகிறார். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் சுக-சாந்தியின் அனுபவம் ஏற்படவேண்டும், ஒவ்வொரு குழந்தையும் பரிஸ்தாவாகி உலகத்தில் பரிஸ்தாக்களின் அனுபவத்தை ஏற்படுத்த வேண்டும். அனைவரின் முகமும் அப்படி மகிழ்ச்சி நிறைந்ததாகிவிடவேண்டும், அப்போது யார் பார்த்தாலும் உங்கள் முகம் அவர்களுக்கு நாமும் இப்படி ஆகியே தீரவேண்டும் என்ற பிரேரணை தருவதாக இருக்க வேண்டும். 09.03.2013

**83.** இப்போது பாப்தாதா ஐந்து நிமிடங்கள் ஒவ்வொரு குழந்தையும் சக்திமிக்க நினைவில் … அமருங்கள் … வேறு எந்த எண்ணங்களும் இருக்கக்கூடாது … நல்லது … இப்படி தினந்தோறும் இடையிடையே ஐந்து நிமிடங்கள் முற்றிலும் அசரீரியாக இருக்கும் … அனுபவம் … செய்துகொண்டே … செல்லுங்கள். ஏனெனில் … வருங்காலத்தில் … நேரம் மிகவும் சிக்கலாக … வரப்போகிறது. அப்படிப்பட்ட நேரத்தில் … ஒருவேளை பயிற்சி இல்லை என்றால் … கண்ட்ரோலிங் பவர் … இல்லையென்றால் … வெற்றிபெற முடியாமல் போய்விடும். …எனவே … இடையிடையே … இரண்டு நிமிடங்கள் … ஒரு நிமிடம் … ஐந்து நிமிடங்கள் … அசரீரி ஆகக்கூடிய பயிற்சி … தனது தினசரி … நடவடிக்கைகளுக்குத் தக்கபடி … அவசியம் … செய்துகொண்டே செல்லுங்கள் …. 09.03.2013

**84.** எப்போது அன்பில் கலந்துவிடுகிறீர்களோ அதாவது அன்பில் மூழ்கிவிடுகிறீர்களோ அப்போது பhபாவிற்குச் சமானமாகி விடுகிறீர்கள், இதைத்தான் அவர்கள் இரண்டற கலந்து விடுவது என்று சொல்லிவிட்டார்கள். எனவே அப்படி அனுபவம் செய்கிறீர்களா? ஆத்மா பாபாவின் அன்பில் தன்னை முழுவதும் இழந்துவிட்டதை அனுபவம் செய்ய வேண்டும், என்ன அப்படிப்பட்ட அனுபவம் ஏற்படுகிறதா? எப்படி ஒருவர் கடலில் கலந்துவிட்டால் அந்த நேரத்தில் அவருக்கு என்ன அனுபவம் ஏற்படும்? கடலைத்தவிர வேறு எதுவும் அவரது கண்களுக்குத் தெரியாது. எனவே ‘பாபா’ என்றால் அனைத்து குணங்களின் கடலில் மூழ்கிவிட வேண்டும் - இதைத்தான் அன்பில் மூழ்கிவிடுவது என்று சொல்லப்படுகிறது அதாவது பாபாவின் அன்பில் இரண்டற கலந்துவிடுவது. பாபாவோடு கலக்க வேண்டாம், ஆனால் பாபாவின் நினைவில் கலந்துவிட வேண்டும். என்ன அப்படிப்பட்ட அனுபவம் ஏற்படுகிறதா? 03.03.1996 ரிவைஸ்

**85.** எப்படி இன்று ஒவ்வொருவருடைய முகத்திலும் பொக்கிஷத்தால் நிறைந்திருக்கும் பிரகாசம் தெரிகிறதோ அப்படியே எப்போதும் இருக்க வேண்டும். யார் உங்களைப் பார்த்தாலும் உங்கள் முகம் பேசவேண்டும், நீங்கள் பேசவேண்டிய அவசியமே இருக்கக்கூடாது. எனவே அப்படி இப்போது உங்கள் முகம் பிரகாசிக்கிறதா, அப்படி எப்போதும் இருக்கிறதா? என எப்போதும் ‘செக்’ பண்ணுங்கள். எனவே யார் பார்த்தாலும் முகம் சொல்ல வேண்டும், முகம் பேச வேண்டும். இப்படியாக பொக்கிஷத்தால் நிறைந்திருப்பது நீங்கள் செயலைச் செய்தாலும், யோகா செய்தாலும், பாபா நினைவில் இருந்தாலும் அப்படியே தெரிய வேண்டும். ஏனெனில் இந்தக்காலத்தில் நேரம் போகப்போக சூழ்நிலைக்குத் தக்கபடி டென்சன் அதிகமாகும். அப்போது உங்கள் முகம் அவர்களை சந்தோஷப்படுத்த வேண்டும். 05.04.2013

**86.** வீண் எண்ணங்களும் இருக்கக்கூடாது, எப்போதும் உள்ளத்தில் பாபா கலந்திருக்கிறாரா என்பதை செக் பண்ணுங்கள். முயற்சியின் மீது எண்ணங்களின் கவனம் இருக்க வேண்டும். சொல் மற்றும் செயல் பெரிய பொருளாக இருக்கிறது ஆனால் எண்ணங்களும் வீணாகப் போகக்கூடாது ஏனெனில் ஒவ்வொரு எண்ணத்தையும் சோதிப்பது அவசியமாக

இருக்கிறது. வார்த்தை மற்றும் செயலும் இருக்கிறது எனினும் மனதின் சக்தி பவர்புல் ஆவதன்மூலம் வார்த்தை மற்றும் செயலில் வித்தியாசம் வந்துவிடுகிறது. எனவே பாப்தாதா இன்று மனதின் எண்ணங்களின் மீது கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கிறார். யார் நிமித்தமான மகாரதியாக இருக்கிறீர்களோ அவர்கள் இப்போது மனதின் சக்தி மீது கவனம் கொடுக்க வேண்டும் அப்போது வார்த்தை மற்றும் செயல்கள் தானாகவே சரியாகப் போய்விடும். எனவே இன்று பாப்தாதா மனதின் எண்ணங்களுக்கு சைகை கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஏனெனில் எவைகள் அவசியமில்லாத வீண் எண்ணங்களோ அவைகளும் நேரத்தை எடுத்துக்கொள்கிறது. அந்த நேரத்தை மிச்சப்படுத்த வேண்டும். 27.02.2014

**87.** தனது ராஜ்ஜியத்திற்குப் போவதற்காக தனக்குள் எந்த அளவு சம்பூரணநிலையை கொண்டு வந்திருக்கிறீர்கள் என ஒவ்வொருவரும் தனது உள்ளத்தின் சார்ட்டைப் பார்க்க வேண்டும். ஏனெனில் சம்பூரண ராஜ்ஜியத்திற்குப் போக வேண்டும் அங்கே துக்கத்தின் பெயரடையாளம் எதுவும் இருப்பதில்லை, எனவே இப்போதிருந்து தனது உள்ளத்தில் எப்போதும் தடங்களின்றி இருப்பதற்கான சமஸ்காரத்தைப் பாாக்கிறீர்களா? தடைகள் வருவதற்கு முன்னமேயே தடையற்ற நிலை அனுபவமாகிறதா? இப்போது பாப்தாதா குழந்தைகளிடம் விக்ன-வினாசகரின் விசேசத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் மேலும் பார்க்கவும் விரும்புகிறார். பாபாவுடன் தடையற்ற துணையாகி செல்வதற்கான உறுதியான சமஸ்காரம் சிலரிடம் இருக்கிறது, 'அட்டென்சன்' இருக்கிறது எனினும் அட்டென்சன் இருப்பதன் அர்த்தம் நோ டென்சன். 27.02.2014

**88. சம்பூரணம் என்றால் ஒவ்வொரு செயலும் கலையைப்போல இருக்க வேண்டும்.** சம்பூரணமாக வேண்டும் என்பதே அனைவருடைய முயற்சியின் இலட்சியமாக இருக்கிறது. சம்பூரண நிலை என்று எதற்குச் சொல்லப்படுகிறது? எந்தப் படம் முன்னால் இருக்கிறது அதை சம்பூரண நிலை என உணர்ந்திருக்கிறீர்கள்? பிரம்மாபாபா அவர்களும் எந்த சம்பூரண நிலையை தாரணை செய்தாரோ அதனில் என்ன விசயம் இருந்தது? எப்போது பிறருக்குச் சொல்கிறீர்களோ அப்போது சம்பூரண நிலையைக் குறித்து எதையெல்லாம் சொல்கிறீர்கள்? **இந்த ஞானத்தின் மூலமாக அனைத்து குணங்களும் நிறைந்தவராக, பதினாறு கலைகளும் முழுமைபெற்றவராக, முற்றிலும் விகாரமற்றவராக ஆகிறோம்** என மற்றவர்களுக்கு விளங்க வைக்கிறீர்கள் இல்லையா? சம்பூரணநிலை அடைந்தவர் என்றால் **அவரது ஒவ்வொரு கர்மமும், நடத்தையும், பார்ப்பது, பேசுவது, நடப்பது எல்லாம் கலையைப்போல பார்ப்பதற்குத் தெரியும்**.

**89.** நம்பிக்கை புத்தி உடையவருக்கு வெற்றி என்பது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுவிட்டது. பாபா மற்றும் தன்மேல் நிச்சயபுத்தி இருக்குமாயின் அப்போது வெற்றி எங்கே போகும். நிச்சயபுத்தி உடையவருக்குப் பின்னால் வெற்றி வந்துகொண்டே இருக்கிறது. அவர்கள் வெற்றிக்குப்பின்னால் ஓடுவதில்லை, ஆனால் வெற்றி அவர்களுக்குப் பின்னால் ஓடிவருகிறது. நாம் வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணத்தையும் அவர்கள் தியாகம் செய்துவிடுகிறார்கள். அப்படி அனைத்தையும் தியாகம் செய்துவிட்டீர்களா? **அனைத்தையும் தியாகம் செய்தவர் மேலும் அனைத்து எண்ணங்களையும் தியாகம் செய்தவர். வெறும் அனைத்து சம்பந்தங்களை மட்டும் தியாகம் செய்திருப்பவர் அல்ல. அனைத்து எண்ணங்களையும் தியாகம் செய்திருப்பவர்-இப்படி இருப்பதே சம்பூரண நிலையாக இருக்கிறது.**

**90.** தனது தேக உணர்வையும் அர்ப்பணம் செய்ய வேண்டும். நான் இன்னாராக இருக்கிறேன் என்ற எண்ணத்தையும் அர்ப்பணம் செய்ய வேண்டும். எந்தவொரு குணத்திலும் குறை இருக்கக்கூடாது. இப்போது இந்தக் குறை இருக்கிறது என வர்ணனை செய்கிறீர்கள் என்றால் அதிலிருந்து நீங்கள் இன்னும் சம்பூரணமாகவில்லை என்பது நிரூபணமாகிறது. எனவே எல்லா குணங்களும் நிறைந்திருக்கிறதா? **எனவே அனைத்தையும் அர்ப்பணம் செய்து, எல்லா குணங்களும் நிறைந்தவராகி சம்பூரணநிலையை அடைந்தே தீரவேண்டும் என்று இலட்சியம் கொள்ள வேண்டும்.**

**91. இகழ்-புகழ், வெற்றி-தோல்வி, சுகம்-துக்கம், மானம்-அவமானம் அனைத்திலும் ஒரே நிலையில் இருப்பதையே சம்பூரண நிலை என்று சொல்லப்படுகிறது.** சம்பூரணநிலையில்

இருப்பவர்களிடம் துன்பமான சூழ்நிலையிலும் முகம் அல்லது நெற்றியில் துன்ப அலைகளுக்குப் பதிலாக சுகமான மகிழ்ச்சி அலைகள் தெரியும், அவச்சொற்களை கேட்டபோதும் இது நிந்தனை அல்ல, சம்பூரணநிலை அடைய பக்குவமாக்க வந்த புகழுக்கு தகுந்த சொற்களாக அனுபவமாக வேண்டும். இப்படி சமமான நிலை இருக்க வேண்டும். இதைத்தான் பாப்தாதாவிற்கு அருகில் இருக்கும் நிலை என்று சொல்லப்படுகிறது.

**92.** இப்போது தனது முயற்சிக்காக அல்லது தனது உடலுக்காக நேரம் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. சக்தியும் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. தனது முயற்சிக்காக மனதையும் ஈடுபடுத்த வேண்டி இருக்கிறது, பிறகு இந்த நிலை முடிந்து போய்விடும். பிறகு இந்த முயற்சி மாற்றம் பெற்று **ஒரு நொடியும் ஒரு எண்ணமும் தனக்காக எழாமல், அதற்குப் பதிலாக உலக நன்மையின் பொருட்டே எழுகிறது என்ற அனுபவம் ஏற்படும். அப்படிப்பட்ட நிலையை சம்பூரண அதாவது நிறைநிலை என்று சொல்லப்படுகிறது.**

**93.** நேரத்தின் புகார் எது? வள்ளலாகுங்கள். ஒரு வார்த்தையை நினைவில் கொள்ளுங்கள் - என்ன நடந்தாலும் சரி ‘வள்ளல்’ என்ற வார்த்தையை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். **ஆசையென்றால் என்னவென்று அறியாத நிலை** இருக்க வேண்டும். சூட்சுமத்திலும் பெறவேண்டும் என்ற ஆசை இருக்கக்கூடாது, இதைப் பெறவேண்டும் என்ற ஆசை இருக்கும்படி எவ்விதமான குறையும் அனுபவமாகக் கூடாது. எல்லா பிராப்திகளும் நிறைந்தநிலை இருக்க வேண்டும். எனவே இலட்சியம் என்னவாக இருக்கிறது? நிறைந்தவராகவேண்டும் இல்லையா? நிறைந்தவராவதே சம்பூரணமாவதாகும்.

**94.** ஒவ்வொரு பொக்கிஷத்தையும் தனக்காக எவ்வளவு பயன் படுத்தினீர்கள், பிறருக்காக எவ்வளவு பயன் படுத்தினீர்கள்? என்பதை செக் பண்ணுங்கள். சம்பூரணநிலை என்று எதற்குச் சொல்லப்படுகிறது? என்ன எல்லா பொக்கிஷங்களையும் மற்றவர்களுக்காக பயன் படுத்துகிறீர்களா? ஒருவேளை தனது முயற்சிக்காக மட்டும் ஞானத்தின் பொக்கிஷத்தை அல்லது சக்திகளின் சர்வ பொகக்கிஷத்தை பயன்படுத்தினீர்கள் என்றால் அதுவும் சம்பூரண நிலையாகாது. இப்போது எல்லாப் பொக்கிஷங்களையும் மற்றவர்களுக்காக பயன்படுத்தும் நேரமிது.

**95.** தந்தை எப்படி நிராகாராக இருக்கிறாரோ அப்படி குழந்தைகளும் இருக்கிறார்கள். பாபாவின் குணங்கள் எப்படியோ அப்படியே மகாரதி குழந்தைகளின் குணங்களும் சமானமாக இருக்கும். மாஸ்டராகிவிட்டீர்கள் இல்லையா! எனவே மகாரதி குழந்தைகள் பாபாவிற்கு சமமாவது என்றால் அதாவது அன்பில் கலந்துவிட வேண்டும், பாபாவிற்குள் கலந்துவிடவேண்டும். அதாவது **சமமான சொரூபத்தை அனுபவம் செய்ய வேண்டும்,** அந்த நேரத்தில் பாபா மற்றும் மகாரதி குழந்தைகளின் சொரூபத்தில் மற்றும் குணங்களில் வித்தியாசம் இருப்பது தெரியாது. சகாரத்தில் இருந்தபோதும் நிராகார சொரூபத்தின் அன்பில் மூழ்கி இருப்பார்கள், எனவே சொரூபமும் பாப்சமான் ஆகிவிட்டது அதாவது **தனது நிராகாரி சொரூபம் பிராக்டிகல் நினைவில் இருக்க வேண்டும்.**

**96.** எப்போது சொரூபம் பாப்சமான் இருக்கிறதோ அப்போது குணங்களும் பாப்சமான் இருக்க வேண்டும் எனவே மகாரதிகள் சந்திப்பது என்றால் பாபாவோடு கலந்துவிடுவது எப்படி நதி கடலில் கலக்கும்போது கடல் ரூபமாகிவிடுகிறது அதாவது பாபாவின் அனைத்து குணங்களும் தனக்குள் அனுபவமாகிறது, எந்த அனுபவம் பிரம்மா பாபாவிற்கு சாகாரத்தில் ஏற்பட்டதோ அது மகாரதிகளுக்கும் ஏற்படும். அப்படி அனுபவம் ஆகிறதா? கடலோடு கலந்துவிடுவது என்றால் தான் சம்பூரண நிலையில் இருப்பதை அனுபவம் செய்வது. இந்த அனுபவம் இப்போது அதிகமாக வேண்டும்.

**97.** ஒவ்வொரு நொடியிலும், ஒவ்வொரு எண்ணத்திலும் பாபா பாபா என்பது நினைவில் இருக்க வேண்டும் நான் என்பது இல்லாமல் இருக்க வேண்டும். எப்போது நான் என்பது இல்லையோ அப்போது என்னுடையது என்பதும் இருக்காது, என்னுடைய சுபாவம், என்னுடைய சமஸ்காரம், என்னுடைய நேச்சர், என்னுடைய செயல், என்னுடைய டியூட்டி, என்னுடைய பெயர்,

என்னுடைய புகழ் என்ற எல்லா என்னுடையவைகளும் இல்லாமல் போய்விடுகிறது. **நான் மற்றும் என்னுடையது இல்லாமல் போவதே சமமாவதும் சம்பூரணமாவதுமாக இருக்கிறது.** கனவில்கூட என்னுடையது என்பது வரக்கூடாது.

**98. எப்போதும் ஆத்ம அபிமானியாக இருப்பதுவே சம்பூரண நிலையாக இருக்கிறது** எனவே நான் பாக்கியவான், சிறந்த ஆத்மா என்பது எப்போதும் நினைவில் இருக்கட்டும். சிறந்த என்ற வார்த்தை எப்போதும் நினைவில் இருக்க வேண்டும். நான் சிறந்த ஆத்மா, சிறந்த பாபாவுடையவனாக இருக்கிறேன். மேலும் சிறந்த பாக்கியசாலியாக இருக்கிறேன். இந்த வரதானம் எப்போதும் நினைவில் இருக்க வேண்டும். எப்போது சிறந்த ஆத்மா, சிறந்த நேரம், சிறந்த எண்ணம், சிறந்த உணர்வு, சிறந்த செயலாக இருக்கிறதோ அப்போது இந்த அனைத்தையும் பார்த்து சிறந்தவராகவேண்டும் என்ற சுபஆசை அனேக ஆத்மாக்களிடம் உற்பத்தியாகும். இதன்மூலம் சேவையும் நடந்துவிடுகிறது.

**99. 'சம்பூரணநிலை என்றால் சமாதான சொரூபம்'** பிரம்மா பாபாவைப் பார்த்தீர்கள் அல்லவா, பிரச்சினைகளை எடுத்துச் சென்றவர்களும் பிரச்சினைகளை மறந்துபோய்விட்டார்கள். எதை எடுத்துக்கொண்டு வந்தார்கள், எதை எடுத்துக்கொண்டு சென்றார்கள். இதை அனுபவம் செய்தீர்கள் இல்லையா. பிரச்சினைகளின் விசயங்களைப் பேச தைரியமில்லாமல் போய்விட்டது, ஏனெனில் சம்பூரண நிலைக்கு முன்னால் அந்தப் பிரச்சினைகள் சிறுபிள்ளை விளையாட்டைப்போல அனுபவமானது, **எனவே பிரச்சினைகள் முடிந்துவிட்டிருந்தது. இதைத்தான் சம்பூரணநிலை அதாவது சமாதானநிலை என்று சொல்லப்படுகிறது.**

**100.** நீங்கள் சதோபிரதானமாக இருக்கும்போது இயற்கையும் சதோபிரதானமாக இருக்கிறது. அவர்கள் ரஜோபிரதான உலகில் சதோபிரதான நிலையை அனுபவம் செய்கிறார்கள். எனவே நேரடிப் படைப்பிற்கும் மறைமுக படைப்பிற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. நாம் பரமாத்மாவின் நேரடிப்படைப்பு என்று இந்த அளவு போதை இருக்கிறதா. **போதை எப்போதும் இருக்கிறதா** அல்லது அவ்வப்போது ஏறுகிறதா? எப்போதும் இருக்க வேண்டும் அல்லவா அப்படியென்றால் 'வேண்டும், வேண்டும' என்று எதுவரை சொல்வீர்கள்? எனவே சம்பூரணம் ஆவதென்றால் இந்த வேண்டும் என்ற சப்தம் இல்லாமல் போய்விடவேண்டும். எல்லோருடைய வாயிலும் எப்போதும் என்ற வார்த்தை இருக்க வேண்டும்.

**101.** பிராமண வாழ்வின் இலட்சியமே சம்பூரணமாவதுதான். எவரெடி என்றால் சம்பூரணம். எனவே எவ்வளவு நேரம் வேண்டும்? ஒருவேளை எவரெடியாக இருந்தீர்கள் என்றால் நேர உணர்வில் இருக்க மாட்டீர்கள். பாபாவுடையவர் ஆகிவிட்டீர்கள், எனவே பாபாவைத்தவிர வேறு யாராவது இருக்கிறார்களா என்ன? அப்போது என்ன தயாராக வேண்டும்? ஒரு பாபாவைத்தவிர வேறு யாருமில்லை என்பது தயாராவது இல்லையா. அப்படித்தான் இருக்கிறீர்கள், எப்போது ஒருவர் மட்டுமே இருக்கிறாரோ அப்போது அவர் பக்கம் மன்மனாபவ என்பது மட்டுமே இருக்கிறது.

**102.** பாப்தாதா குழந்தைகளிடம்தானே கேட்பார், எதுவரை? இன்றைய விசேச தலைப்பு **எதுவரை**? டபுள் வெளிநாட்டவரும் அமர்ந்திருக்கிறார்கள் அல்லவா! அப்போது டபுள் முயற்சி இருக்கும். அதிசயங்களைச் செய்து காட்டுங்கள். உதாரணமாகுங்கள், பிராமண குடும்பத்திற்கு முன்பாக, உலகத்திற்கு முன்பாக நிறைவாகவும் முழுமையாகவும் ஆகுங்கள் அதுபோதும். **அனைத்து குணங்கள் மற்றும் அனைத்து சக்திகள் நிரம்பியவர் ஆகுங்கள் அதாவது சம்பூரணமாகுங்கள் அதாவது எல்லாம் இருக்க வேண்டும். மனம், சொல், சம்பந்தம், தொடர்பு நான்கிலும், நான்கில் ஒன்றுகூட பலவீனமாக இருந்தால் நிறைந்தவர் என்று சொல்ல முடியாது. புரிந்ததா?**

**103.** இப்போதய நேரத்தில் சாகார ரூபத்தில் எல்லோரும் உங்களைத்தானே பின்பற்றுகிறார்கள்? புத்தியோகத்தின் மூலமாக சக்தி பெறுவது, புத்தியோகத்தின் மூலமாக சிறந்த செயல்களை பின்பற்றுவது ஆகியவைகளை உங்களைப் பார்த்துதானே செய்கிறார்கள். தாய் தந்தையர் அதற்கு நிமித்தமாக இருக்கிறார்கள், எனினும் சாகார ரூபத்தில் இப்போது

**யாரை பின்பற்றுகிறார்கள்? இப்போது நிமித்தமாக இருப்பவர்களை.** எனவே மாற்றத்தை கொண்டுவருவதற்கு அப்படிப்பட்ட உதாரணமாகுங்கள். ஒவ்வொரு நேரமும் வருகின்ற கூட்டங்களில் சினேகம், நெருக்கம், உதவி இவைகள் மூலமாக முன்னேற்றமும் மாற்றமும் வருகிறது. இப்போது அனைவருடைய சம்பூரண நிலையும் பிரத்தியட்ச ரூபத்தில் தெரிய வேண்டும்.

**104.** மோகமற்ற நிலையில் சம்பூரணம், அதாவது ஒரு நொடியில் தனது சம்பூரண நிலையில் நிலைத்துவிட முடியுமா? இந்த ஆன்மீக டிரில்லை பயிற்சி செய்பவர் ஆகிவிட்டீர்களா? ஒரு நொடியில் எந்த நிலையில் தன்னை இருத்த நினைக்கிறீர்களோ அந்த நிலையில் இருக்க வைக்க முடிகிறதா? மேலும் எவ்வளவு நேரம் மற்றும் எந்த நேரத்தில் விரும்புகிறீர்களோ அப்போது நிலைத்துவிடுங்கள், இதன் பயிற்சி இருக்கிறதா? அல்லது இதுவரை இயற்கையின் மூலமாக உண்டான பிரச்சினைகள் உங்கள் நிலையை ஏதாவது கொஞ்சம் தன்பக்கம் கவர்ந்து விடுகிறதா?

**105.** பிராமண ஆத்மாக்கள் நீங்கள் அனைவருக்கும் செய்தி கொடுக்கும்போது என்ன சொல்கிறீர்கள்? **சம்பூரண தூய்மை, சுகம், சாந்தி உங்கள் பிறப்புரிமை என்று சொல்கிறீர்கள். உங்கள் சக்திக்குத் தக்கபடி உங்கள் உரிமையாக இருக்கிறது என்று சொல்வதில்லையே. சம்பூரணம் என சொல்கிறீர்கள்** என்றால் எப்போது சம்பூரண அதிகாரம் இருக்கிறதோ அங்கே சம்பூரண பிராப்தி செய்வதே பிரமாண வாழ்க்கையாக இருக்கிறது. அரைகுறையாக இருந்தால் அது சத்திரிய வாழ்க்கையாகும். **சூரியவம்சி என்றால் பதினாறு கலைகள் சம்பூரண, சர்வகுணங்கள் நிறைந்த, சம்பூரண நிர்விகாரி என ஒவ்வொரு விசயத்திலும் சம்பூரணம்.**

**106. பவித்திரத்தில் சம்பூரணநிலை அதாவது சம்பூரண ஆத்மாவிடம், தேவதையாகக் கூடியவரிடம் ஏதாவது வீணான, சாதாரண, உலகீய பேச்சு அல்லது செயல் எல்லாம் இருக்குமானால் அதை சம்பூரண பவித்திரம் என்று சொல்ல முடியாது**. சம்பூரண நிலைக்கு அருகில் சென்று கொண்டிருக்கிறீர்கள். எனவே தற்சமயத்திற்குத் தக்கபடி வீணான அல்லது சாதாரண செயல்கள் எதுவும் இருக்கக்கூடாது, இதை சோதித்து மாற்றிவிட வேண்டும்.

**107.** ஒவ்வொரு குழந்தையும் பாப்சமான் ஆகிவிடவேண்டும், ஒவ்வொருவருடைய முகத்திலிருந்தும் பாபா வெளிப்படையாகத் தெரிய வேண்டும் என பாபா விரும்புகிறார், அப்படி ஆகிவிட்டீர்களா? பாப்தாதாவின் உள்ளம் கவர்ந்த நிலை எது என்று தெரியுமல்லவா! பாபாவின் உள்ளம் கவர்ந்த நிலையாக இருப்பது சம்பூரண பவித்திரம். சம்பூரண பவித்திரத்தின் ஆழத்தை அறிந்திருக்கிறீர்களா? **எண்ணத்திலும் கனவிலும் இம்மி அளவு கூட அபவித்திரத்தின் பெயரடையாளம் இருக்கக்கூடாது.**

**108.** பாப்தாதா தற்சமயம் நேரம் நெருங்கி வருவதற்குத் தக்கபடி சம்பூரண பவித்திரத்தின் கணக்குப்படி வீண் எண்ணங்கள் எதுவும் வரவில்லையா? எந்தவிதமான வீண் எண்ணங்களும் சம்பூரண நிலையை விட்டு தூர விலக்கவில்லையா? என அடிக்கடி உங்கள் கவனத்தை ஈர்க்கிறார்.

**109.** எனது பவித்திரம் எத்தனை சதவீதம் இருக்கிறது என்று ஞானக் கண்ணாடியில் பாருங்கள். பிரம்மச்சரியம் மட்டும் பவித்திரமாகாது ஆனால் பிரம்மாச்சாரியாகி மனம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பு ஆகிய அனைத்திலும் பவித்திரம் இருக்கிறதா எனப் பாருங்கள். எத்தனை சதவீதம் இருக்கிறது? சதவீதத்தை கண்டுபிடிக்கத் தெரிகிறதா.

**110.** இப்போது சம்பூரண மூர்த்தியாவதற்காக எந்த இலட்சியத்தை முன்னால் வைப்பீர்கள்? சாகாரத்தில் சம்பூரண இலட்சியமாக இருப்பது ஒன்றே ஒன்றுதானே? சாகார பிரம்மா பாபா அவர்கள் கர்மாதீத்நிலை அடைவதற்காக எந்த இலட்சியத்தை கொண்டிருந்தார்? எந்த விசயங்களில் சம்பூரணமானார்? சம்பூரணம் என்ற சப்தத்தை எவ்வளவு விசாலமாக தாரணை செய்தார் என்பது தெரியுமா? **வார்த்தையோ ஒன்றுதான் 'சம்பூரணம்' ஆனால் எந்த அளவு விசால ரூபத்தில் இதனை தாரணை செய்கிறீர்களோ அந்த அளவு விசால புத்தி உடையவராக ஆவீர்கள் மேலும் உலகிற்கு அதிபதியாகவும் ஆவீர்கள்.**

**111.** சங்கரன் என்றால் உங்கள் தபஸ்வி ரூபம். அவர் விகாரங்கள் வடிவ பாம்பை தனது கழுத்தின் மாலையாக ஆக்கிவிட்டார். அவர் எப்போதும் உயர்ந்த நிலையில், உயர்ந்த ஆசனத்தில் இருப்பவர். இந்த மூன்றாவது கண் சம்பூரணத்தின் கண்ணாக, நிறைந்த நிலையின் கண்ணாக இருக்கிறது. எப்போது நீங்கள் தபஸ்வி, நிறைந்த, முழுமையான நிலையில் இருந்து உலகை மாற்றும் எண்ணம் கொள்கிறீர்களோ அப்போது இந்த இயற்கையும் சம்பூரண பிரச்சனைகளின் தாண்டவமாடும், உபத்திரவத்தை உண்டாக்கும் தாண்டவமாடும்.

**112.** நீங்கள் ஆடாமல் அசையாமல் உறுதியாக இருப்பீர்கள் ஆனால் அப்போது இயற்கை போராட்டத்தில் இருக்கும், ஏனெனில், இவ்வளவு பெரிய உலகத்தை யார் சுத்தப்படுத்துவது? மனித ஆத்மாக்களால் செய்ய முடியுமா? இந்த காற்று, நிலம், கடல் மற்றும் தண்ணீரின் சீற்றங்களே சுத்தமாக்கும். எனவே அப்படிப்பட்ட சம்பூரண நிலையை இந்த தபஸ்யா மூலம் உருவாக்க வேண்டும். எப்போது முதலில் உங்கள் உதவியாட்களாகிய கர்மேந்திரியங்கள், **மனம், புத்தி, சமஸ்காரம் எல்லாம் உங்கள் கட்டளையை ஏற்று நடக்கிறதோ அப்போது இயற்கைகூட உங்கள் எண்ணங்களை கட்டளையாக ஏற்று நடக்கும்.**

**113.** சம்பூரண நிலையை அடைவதற்காக மூன்று ஒளிகளைத் தாரணை செய்ய வேண்டும், எப்போது இந்த **மூன்று ஒளிகளும் பிரகாசித்துக் கொண்டிருப்பது தெரிகிறதோ, அப்போது அனைவருக்கும் காட்சி கொடுக்க முடியும். 1. தூய்மையின் ஒளி, 2. சதோபிரதான தெய்வீக பார்வையின் ஒளி, 3. நெற்றிமணியின் ஒளி.** இவை மூன்றும் சம்பூரணமாவதற்கு முக்கிய விசயங்களாக இருக்கிறது. எனவே எப்போதும் **சதோபிரதான ஆத்மீக 'திருஷ்டி'** எப்போதும் **ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு சொல் மற்றும் கர்மத்தில் தூய்மையின் ஜொலிப்பு** ஆகியவைகளை எந்த அளவு நடைமுறையில் கொண்டுவந்திருக்கிறீர்கள்? என்ன எப்போதும் நினைவு சொரூபத்தில் இருக்கிறீர்களா?

**114.** அனேகவிதமான துன்பங்களின் பட்டியலை தயாரித்தீர்கள் அதுபோல விதவிதமான பந்தனங்களின் பட்டியலை தயார் செய்யுங்கள். அந்த பட்டியலை முன் வைத்து அவைகளில் எத்தனை பந்தனத்தில் இருந்து விடுபட்டிருக்கிறீர்கள், இன்னும் **எத்தனை பந்தனங்கள்** இதுவரை **இருக்கிறது** என்பதை **'செக்'** பண்ணுங்கள். இதிலிருந்து தான் சம்பூரண நிலைக்கு எவ்வளவு அருகில் சென்று இருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ள முடியும்.

**115.** சாகார பிரம்மா மற்றும் சம்பூரண பிரம்மா இடையே என்ன வித்தியாசம் இருந்தது. அதேபோல இன்று பாப்தாதா குழந்தைகளிடம் இருக்கும் வித்தியாசத்தை பார்த்துக் கொண்டிருந்தார். காட்சி மிக அருமையாக இருந்தது. கீழே தபஸ்வியாக முயற்சி செய்யும் ரூபம், மேலே நின்றுகொண்டிருக்கும் பரிஸ்தா ரூபம். தத்தமது ரூபத்தை தோற்றுவிக்க முடிகிறதா? தனது சம்பூரண பிராமண சொரூபம். பிரம்மா பாபா மற்றும் நமது சம்பூரண ரூபத்திற்கிடையே எத்தனை வித்தியாசங்கள் இருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருக்கிறீர்கள்.

**116.** எப்போது நீங்கள் இப்போதிருந்தே சம்பூரணநிலையை அருகில் கொண்டுவருகிறீர்களோ அப்போது வரிசைப்படி மற்றவர்களாலும் அருகில் கொண்டுவரமுடியும். ஒருவேளை நீங்களே கடைசியில் கொண்டுவருவீர்கள் என்றால் மற்றவர்கள் என்ன செய்வார்கள். சாகாரரூப பிரம்மா சம்பூரணத்தை சாகாரத்தில் கொண்டுவந்தார். **சம்பூரணநிலை சாகார ரூபத்தில் தெரிய வந்தது.** சம்பூரண நிலையும் சாகார ரூபமும் வெவ்வேறாக பார்ப்பதற்குத் தெரிந்ததா? அதேபோல உங்கள் சாகார சொரூபம் பார்ப்பதற்கு வேறாகத் தெரியாது.

**117.** எல்லையற்ற மேடையில் நான் எனது பாகத்தை நடித்துக்கொண்டிருக்கிறேன் என்றே புரிந்துகொள்ளுங்கள். உலகம் முழுவதும் உள்ள ஆத்மாக்களின் பார்வை என்மீது உள்ளது - இப்படி புரிந்துகொள்வதன் மூலமாக சம்பூரண நிலையை விரைவில் தாரணை செய்ய முடியும், புரிந்ததா? **ஒரு சுலோகனை எப்போதும் நினைவில் வையுங்கள்** அதன்மூலம் எளிதில் விரைவில் சம்பூரணமாக முடியும். அது எந்த விசயம்? இப்போது **தாமதப்படுத்தினால் ராஜபாக்கியத்தின் அதிகாரமும் இந்த அளவு தாமதமாகிவிடும்.** எனவே தற்போதய நேரப்படி ஒரு நொடிகூட தாமதப்படுத்தக்கூடாது என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்.

**118.** எல்லாம் நிறைந்த பிறகே முழுமையாக முடியும். தற்போதய நேரம் ஒவ்வொரு அடியையும் மிகக் கவனமுடன் எடுத்து வைக்கும் நேரமாக நடந்துகொண்டிருக்கிறது, எனினும் சரியாக கவனம் கொடுக்காத காரணத்தால் முயற்சி செய்வதிலும் டென்சனாக இருக்கிறீர்கள். ஒருபுறம் சூழ்நிலையின் டென்சன் இருக்கிறது, இன்னொறுபுறம் முயற்சி செய்ய வேண்டிய 'டென்சன்' இருக்கிறது. எனவே ஒரு எழுத்தை மட்டும் சேருங்கள், 'அட்டென்சன்'. பிறகு இந்த பலரூபம் ஒரேயொரு சம்பூரண ரூபம் ஆகிவிடும். எனவே ஒவ்வொரு அடியிலும் கவனமாக இருங்கள்.

**119.** சம்பூரண சொரூபத்தை அனுபவம் செய்வதற்காக எப்போதும் மூன்று வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள். **வெட்டுவது, மாற்றுவது மற்றும் இனைப்பது. கர்ம பந்தனங்களை யோக பலத்தால் வெட்ட வேண்டும், தனது பழைய சுபாவ சமஸ்காரங்களை மாற்ற வேண்டும், ஒரு பாபாவோடு மட்டும் சர்வ சம்பந்தங்களையும் இணைக்க வேண்டும்.** எனவே வெட்டிக் கொண்டிருக்கிறேனா, மாற்றிக் கொண்டிருக்கிறேனா மற்றும் இணைத்துக்கொண்டிருக்கிறேனா என்பதை எப்போதும் பார்த்துக் கொண்டே இருங்கள். இந்த மூன்றில் எந்த ஒன்றிலும் குறையில்லையா எனப் பாருங்கள் அப்போது விரைவில் சம்பூரணமாகிவிடுவீர்கள்.

**120.** நீங்கள் எல்லோரும் தம்மை சம்பூரணமாக்கும் முயற்சியில் சென்றுகொண்டிருக்கிறீர்கள். சம்பூரண மூர்த்தி ஆவதற்கு முக்கியமாக நான்கு விசேசங்களை தாரணை செய்ய வேண்டும், அதன்மூலம் எளிதாக சம்பூரண மூர்த்தியாகிவிடலாம். யோகத்தில் எப்போதும் ஒரேரசனை நிலையில் இருப்பதற்கு நான்கு முக்கிய நியமங்களை தூண்கள் வடிவில் காட்டி இருக்கிறீர்களோ, **அதேபோல சதா சம்பூரண மூர்த்தி ஆவதற்கு இந்த நான்கு விசேசங்கள் தூண்கள் ரூபத்தில் இருக்கின்றன. 1. ஞான மூர்த்தி, 2. குணமூர்த்தி, 3. மகாதான மூர்த்தி மற்றும் 4. நினைவு மூர்த்தி அதாவது தபஸ்வி மூர்த்தி.**

**121.** கடைசி நிலைக்கு எவ்வளவு அருகில் வந்திருக்கிறீர்கள் என்று தன்னைத்தானே கேளுங்கள். எந்த அளவு சம்பூரண நிலைக்கு அருகில் இருக்கிறீர்களோ, அதாவது பாபாவிற்கு அருகில் இருக்கிறீர்களோ அதற்குத் தக்கபடி எதிர்கால பலனாக ராஜ்ஜிய அதிகாரியாக இருப்பீர்கள். கூடவே பக்த வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலும் சமீப சம்பந்தத்தில் இருப்பீர்கள், அதாவது பூஜைநிலை மற்றும் பூசாரி நிலை இரண்டு வாழ்க்கையிலும் சாகார பாபாவிற்கு அருகில் இருப்பீர்கள். அதாவது ஆதி ஆத்மாவோடு முழு கல்பமும் சம்பந்தம் அல்லது தொடர்பில் இருப்பீர்கள்.

**122.** கடைசியில் உள்ள பலவீன ஆத்மாக்களுக்கு **மகாதானி, வரதானியாகி கொடுக்கும் அனுபவத்தின் தானம், மற்றும் நொடிநேர சக்திசாலி நிலை மூலமாக செய்து வைத்த புண்ணியம், அரை கல்பத்திற்கு உங்களை பூஜைக்குரியவராகவும் புகழுக்குரியவராகவும் மாற்றிவிடுகிறது**. ஏனெனில் கடைசி காலத்தில், ஆத்மாக்களுடைய கடைசி நேரத்தில் சம்பூரண ஆத்மாக்கள் உங்கள் மூலமாக கிடைக்கும் பிராப்தியின் அனுபவம், மற்றும் சம்பூரண சொரூபத்தை காட்டும் நிறை சொரூப காட்சியின் அனுபவம் ஆகிய கடைசி அனுபவங்களின் சமஸ்காரங்களை எடுத்துக் கொண்டு ஆத்மாக்கள் அரை கல்பத்திற்கு தங்களுடைய வீடான சாந்திதாமத்தில் ஒய்வில் இருப்பார்கள்.

**123.** மாற்றம் செய்வதற்கான வழிமுறைகள் உங்களுக்கு வரவில்லையா? தேகத்தின் பார்வைக்குப் பதிலாக ஆத்மாவின் பார்வையாக மாற்றம் செய்வது உலகீய தொடர்புகளை ஆன்மீக அலௌகீக தொடர்பாக மாற்றுவது ஆகியவைகளில் குறை இருப்பதால் சம்பூரண நிலையை அடைய முடிவதில்லை. இயற்கையிடம் கூட மாற்றுவதற்கான சக்தி இருப்பதைப் பாருங்கள். விஞ்ஞானத்திற்கும் இந்த சக்தி இருக்கிறது. வெப்பமான சூழலை குளிராகவும், குளிரான சூழலை வெப்பமாகவும் மாற்றி விடுகிறது. இயற்கையின் சக்தி பொருட்களை மாற்றிவிடுகிறது, அப்படி **இருக்க பரமாத்ம சக்தி அல்லது சிறந்த ஆத்மாக்களுடைய சக்தி தன்னுடைய பார்வை, உணர்வுகளை மாற்ற முடியாதா என்ன?** எப்படி பாபா ஆத்மாக்களை

மாற்றுகிறாரோ, அப்படி நீங்கள் உங்கள் சம்பந்தம் தொடர்பில் வரக்கூடிய ஆத்மாக்களை மாற்றிவிடுங்கள்.

**124.** நேரம் தானகவே சம்பூரணமாக்கிவிடும் என நினைக்காதீர்கள், ஆனால் நீங்கள் சம்பூரணமாகி நேரத்தை அருகில் கொண்டுவாருங்கள். **நேரம் படைப்பு, நீங்கள் படைப்பவர், படைப்பவர் படைப்பின் ஆதாரத்தில் இருப்பதில்லை. படைப்பவர் படைப்பை தன் கட்டுப்பாட்டில்** வைத்திருப்பார். எனவே அப்படிப்பட்ட மாற்றம் செய்யும் சக்தியை தாரணை செய்யுங்கள். மேலும் தனது சம்பூரண சொரூபத்தை எழச் செய்யுநகள், அனுபவம் செய்யுங்கள்.

**125.** இன்று பாப்தாதா எதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்? ஒவ்வொரு நட்சத்திரத்தையும் எந்த ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நட்சத்திரமும் எந்த அளவு சம்பூரணநிலைக்கு அருகில் வந்திருக்கிறது என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறார். எந்த அளவு சம்பூரண நிலைக்கு அருகில் வந்திருக்கிறோம் என உங்கள் எல்லோருக்கும் தன்னைப் பற்றி தெரியுமா? சம்பூரண நிலைக்கு அருகில் வந்துவிட்டோம் என்று அறிவது எப்படி? **எல்லா விசயங்களையும் எல்லா விதத்திலும் எல்லா ரூபத்திலும் சரியாக அறிந்திருப்பதே அந்த ஆத்மா சம்பூரண நிலையை அடைந்ததற்கான அடையாளமாகும்.**

**126.** எல்லா முயற்சிகளும் எளிதாக இருப்பதே சம்பூரணநிலை அருகில் வந்துவிட்டதற்கான அடையாளமாக இருக்கிறது. முயற்சியில் எல்லா விசயங்களும் வந்துவிடுகிறது. நினைவு யாத்திரை, சேவை இரண்டுமே முயற்சியில் வந்துவிடுகிறது. எப்போது இரண்டும் சரளமாக இருக்கிறதோ அப்போது நாம் விரைவில் சம்பூரண நிலையை அடையப்போகிறோம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். சம்பூரண நிலையில் இருப்பவர்கள் முயற்சி குறைவாக செய்வார்கள் ஆனால் பலனை அதிகமாகப் பெறுவார்கள்.

**127.** யார் சம்பூரண நிலைக்கு மிக அருகில் இருக்கிறார்களோ அவர்களுடைய எண்ணத்தில், சொல்லில், செயலில் நான் எந்த செயலைச் செய்தாலும் அதில் முழு வெற்றி ஏற்கனவே கிடைத்துவிட்டது என்ற போதை இருக்கும். கிடைக்க வேண்டும் அல்லது கிடைக்கப்போகிறது என்றில்லாமல் ஏற்கனவே கிடைத்து விட்டதைப்போல இருக்கும். செயலிலும், எனது ஒவ்வொரு செயலுக்குப் பின்னாலும் வெற்றி எனது நிழல் போல இருக்கிறது என்ற போதை இருக்கும். எனது சொல்லிற்கு வெற்றி ஏற்கனவே கிடைத்துவிட்டது. வெற்றி என்பின்னால் வரக்கூடியது என்ற உணர்வில் இருப்பார்கள்.

**128.** தேர்வு (முடிவு) நேரம் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. எனவே தனது சம்பூரண நிலையின் பிரத்தியட்ச காட்சி அல்லது அனுபவம் வெளிப்படையான ரூபத்தில் நடந்து கொண்டிருக்கிறதா? எப்படி நம்பர் ஒன் ஆத்மா பிரம்மா பாபா தனது சம்பூரண நிலையை போக வர பிராக்டிகல் ரூபத்தில் அனுபவம் செய்தார், அதேபோல உங்களுக்கு உங்கள் சம்பூரண நிலை முற்றிலும் அருகில் தெளிவாக அனுபவமாகிறதா? எப்படி முயற்சி செய்யும் பிரம்மா மற்றும் சம்பூரண பிரம்மா என்ற இரண்டு நிலையும் தெளிவாக இருந்ததல்லவா. அதேபோல உங்களுக்கு உங்கள் சம்பூரண நிலை அந்த அளவு அருகிலும் தெளிவாகவும் அனுபவமாகிறதா?

**129.** சாகார பிரம்மா பாபாவிற்கு எதிர்கால சத்திய யுகமும் அவ்வப்போது அனுபவமாகிக் கொண்டிருந்தது இல்லையா? நீங்கள் எவ்வளவுதான் வேலையில் மும்மரமாக இருந்தாலும் உங்கள் முன்னால் சம்பூரண நிலை எப்போதும் தெளிவாக இருக்க வேண்டும். அதாவது இதோ இந்த நிலையை அடைந்துவிட்டேன் என உணர வேண்டும். எப்போது நீங்கள் சம்பூரண நிலையை அருகில் கொண்டு வருகிறீர்களோ அப்போது நேரமும் தானே அருகில் வந்துவிடும். நேரம் உங்களை அருகில் கொண்டுவருமா அல்லது நீங்கள் நேரத்தை அருகில் கொண்டுவருவீர்களா?

**130.** தனது முயற்சியின் மூலமாக தன்னைத்தானே பாப்தாதாவின் அருகில் அல்லது தனது சம்பூரண நிலையின் அருகில் கொண்டு செல்லும் அனுபவத்தைச் செய்கிறீர்களா? அல்லது எங்கே இருக்கிறீர்களோ அங்கேயே நிற்பவராக தன்னை அனுபவம் செய்கிறீர்களா? யாத்திரை செல்வோர் ஒருபோதும் நிற்பதே இல்லை, **‘இரவுப் பயணிகளே களைப்படையாதீர்கள், விடியல்**

**ஒன்றும் தொலைவில் இல்லை’ எனப் பாட்டும் இருக்கிறதல்லவா. அப்படி தன்னை இரவுப் பயணியாகக் கருதி சென்றுகொண்டே இருக்கிறீர்களா?**

**131.** சம்பூரணநிலையின் முக்கிய குணமாக பிராக்டிகல் செயலில் அல்லது நிலையில் எது தெரியவருகிறது அல்லது சம்பூரண நிலையின் விசேச குணமாக இருப்பது எது? அந்த குணத்தின் மூலம் தான் சம்பூரண நிலைக்கு அருகில் இருக்கிறேனா அல்லது தொலைவில் இருக்கிறேனா என்பதை அறிய முடியும். இப்போது ஒரு நொடியில் உங்கள் சம்பூரண நிலை பிரத்தியட்சமாகிறதா? சம்பூரண ஸ்டேஜ் அல்லது சம்பூரண நிலை எப்போது ஆத்மாவிற்கு வந்துவிடுகிறதோ அப்போது அதன் பிராக்டிகல் செயலுக்கு இருக்கும் புகழ் - (பாபாவிற்கு) சமம்.

**132.** சம்பூரண நிலை என்றால், சம்பூரணமான பொருளின் பிரபாவம் வெளிப்படாமல் இருப்பது என்பது முடியாத காரியம். நிலவுகூட எப்போது பதினாறு கலைகள் முழுமையாக இருக்கிறதோ அப்போது எவ்வளவு வெளிச்சத்தைப் பரப்புகிறது, விரும்பாதபோதிலும் ஒவ்வொருவரையும் தன்பக்கம் கவர்ந்து இழுத்துவிடுகிறது. எந்தவொரு பொருளும் முழுமை பெறும்போது தானாகவே அனைவரையும் கவர்ந்துவிடுகிறது. எனவே சம்பூரண நிலையின் குறைவு காரணமாகவே உலகின் அனைத்து ஆத்மாக்களையும் தன்பக்கம் கவர்ந்து இழுக்க முடியாமல் போகிறது. எந்த அளவு தன்னிடத்தில் குறை இருக்கிறதோ அந்த அளவு ஆத்மாக்களை தன்பக்கம் குறைவாக கவரமுடிகிறது.

**133.** தனது சம்பூரண நிலையின் **முதல் அடையாளம்-கர்மாதீதநிலை** அதாவது எல்லா கர்மபந்தனங்களில் இருந்தும் விடுதலை, பற்றேதுமின்றி இயற்கை (இந்திரியங்கள்) மூலமாக பெயரளவிற்கு காரியங்கள் செய்வது. அப்படிப்பட்ட கர்மாதீத நிலை அனுபவமாகிறதா? பற்றின்றி இருப்பதற்கான முயற்சி அடிக்கடி செய்ய வேண்டி இருக்காது. செய்ய வைப்பவர், செய்யக்கூடிய கர்மேந்திரியங்களில் இருந்து தனிப்பட்டவர் என்ற அனுபவம் எளிதாகவும் தானாகவும் இருக்கும்.

**134.** தனது சம்பூரண சொரூபத்தின் அடுத்த அடையாளம் - உலகத்தின் அதிபதி என்ற உணர்வு. ஸ்தூல உடல் அல்லது ஆடை முன்னால் தெரிகிறது, தயாராக இருக்கும் அந்த ஆடையை இன்னும் சற்றுநேரத்தில் நான் அணியப்போகிறேன் என்ற நம்பிக்கை உண்டாகும், அதை தெளிவாக அனுபவம் செய்வீர்கள். அந்த சர்வ குணங்களும் நிறைந்த, சதோபிரதான புதிய உடல் உங்கள் அகக் கண்ணில் தெளிவாகத் தெரியும் மேலும் போகும்போதும் வரும்போதும் நாளை இந்த பழைய சரீரத்தை விட்டுவிட்டு அந்த புதிய சரீரத்தை பெற்றுக்கொள்வேன் என்ற போதை மற்றும் மகிழ்ச்சி எப்போதும் இருந்துவரும்.

**135.** எல்லோரும் இந்த நேரத்தில் தனது இலட்சணங்கள் மற்றும் எதிர்காலத்தை அறிந்திருக்கிறீர்களா? எந்த அளவு இறுதி நேரத்திற்கு அருகில் செல்கிறீர்களோ, நேரத்தின்படி சம்பூரண நிலையின் முக்கிய அடையாளங்களாக இருப்பவை எவை? தனது சம்பூரண நிலையை அடைந்து கொண்டிருக்கிறீர்கள் - இதில் முக்கியமாக எந்த விசயம் எல்லோருக்கும் அனுபவமாகிறது. **அப்படிப்பட்ட ஆத்மா எப்போதும் தன்னிலும், அனைத்து பாடங்களிலும் திருப்தியாக இருப்பதை அனுபவம் செய்வார்கள். இதுவே முக்கிய விசயமாக இருக்கிறது**.

**136. எப்போதும் தன்னில் தான் திருப்தியாக இருப்பது மேலும் மற்றவரும் அவரோடு திருப்தியாக இருப்பது சம்பூரணத்தின் அடையாளமாக இருக்கிறது.** எனவே திருப்தியே சம்பூரண நிலையின் அடையாளமாக இருக்கிறது. எந்த அளவு எல்லா ஆத்மாக்களுடைய திருப்தியின் ஆசீர்வாதம் அல்லது சூட்சும சினேகம் அல்லது உதவி ஒவ்வொரு நேரமும் கிடைத்து வருகிறதோ, அதிலிருந்து அவ்வளவு சம்பூரணநிலை அருகில் வந்திருக்கிறது எனப் புரிந்துகொள்ளுங்கள். இதில்தான் அதிசயம் இருக்கிறது.

**137. சம்பூரண ராஜரிஷியின் நிலையில் போதை அடையாளம் இரண்டும் தெளிவாக இருக்கும்.** அடையாளம் என்றால் சம்பூரண நிலை. எப்படி ஸ்தூலக் கண்களுக்கு முன்னால் ஸ்தூலப் பொருட்கள் தெளிவாகத் தெரிவது போல, போதையில் இருப்பவருக்கு முன்னால் அடையாளம் அவ்வளவு அருகில் இருக்கும். எப்போது கண்முன்னே தெரிகிறதோ அப்போது இது பொருளா? இல்லையா? எப்படி? என்ற எண்ணங்கள் எதுவும் தோன்றாது. அதேபோல சம்பூரண

நிலையின் அடையாளம் முன்னால் தெரியக்கூடிய காரணத்தால், நான் ஆவேனா, மாட்டேனா அல்லது சம்பூரண நிலை என்று எதற்குச் சொல்லப்படுகிறது என்ற கேள்விகள் எல்லாம் இல்லாமல் போய்விடும். தனது சம்பூரண நிலையின் அடையாளங்கள் தன்னிடத்தில் தெளிவாகத் தெரியவரும்.

**138. அசரீரி பவ-இந்த வரதானத்தைப் பெற்றுவிட்டீர்களா?** எந்த நேரம் '**நான் அசரீரியாக இருக்கிறேன்' என நினைக்கிறீர்களோ அந்த நொடியில் சொரூபமாகிவிடுங்கள். இப்படி பயிற்சி செய்வது எளிதாக இருக்கிறதா? சகஜமாக அனுபவமாக வேண்டும் அதுதான் சம்பூரணநிலையின் அடையாளமாகும்.** சில நேரம் எளிது, சில நேரம் கடினம், சில நேரம் நொடியில், சிலநேரம் நிமிடங்களில் அல்லது அதைவிட அதிக நேரங்களில் அசரீரி சொரூபத்தின் அனுபவம் ஏற்படுகிறது என்றால் சம்பூரண நிலை இன்னும் தொலைவில் இருக்கிறது என்று அர்த்தம். எப்போதும் எளிதில் அனுபவமாவதே சம்பூரண நிலையின் அடையாளமாக இருக்கிறது.

**139.** கடைசியில் எப்போது எல்லோரும் சம்பூரணமாகி விடுகிறீர்களோ அப்போது உங்களுடைய சிறந்த எண்ணங்களின் அக்கினியால், இந்த குப்பைகள் எல்லாம் எரிந்து சாம்பலாகிவிடும். யோகம் பெருஞ்சுடராக இருக்க வேண்டும். கடைசியில் இப்படி மெல்ல மெல்ல சேவை நடக்காது. நினைத்தவுடன் நடந்துவிடும். இதைத்தான் பெருமளவில் நடைபெறும் சேவை என்று சொல்லப்படுகிறது. அதை இப்போது தன்னிடத்தில் நிறைக்கிறீர்கள், பின்னர் செயலில் கொண்டுவருவீர்கள். எப்படி தேவிகளுடைய நினைவுச் சின்னத்தில் ஜுவாலையின் மூலமாக அசுரர்களை கொன்றதாக காட்டியிருக்கிறார்கள். அசுரர்களை அல்ல அசுர சக்திகளை அழித்திருக்கிறார்கள். எனவே இப்போது ஜுவாலாமுகியாகி அசுர சுபாவ சமஸ்காரங்கள் அனைத்தையும் சாம்பலாக்கிவிடுங்கள்.

**140.** நிறைந்திருக்கும் ஆத்மாக்களின் அடையாளங்கள் - **1. நிறைந்திருப்பது** என்றால் எவரெடி, **அனைத்து குணங்கள் நிரம்பியவர், பதினாறு கலைகள் முழுமையானவர் எனப் பாடப்பட்டிருக்கிறது என்றால் எவரெடி அதாவது நிறைந்த நிலை.** 2. நிறைந்திருப்பது என்றால் **எல்லாவற்றையும் சேர்த்து வைத்திருப்பது. 3. பதினாறு வித அலங்காரமே பதினாறு கலையாகும். 4.** நிறைந்திருப்பவர் என்றால் **எல்லா தெய்வீக குணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட மூர்த்தி. 5.** நிறைந்திருப்பவர் என்றால் **அனைத்து பிராப்திகளின் சொரூபமாக இருப்பவர், எந்தவித குறையும் அனுபவமாகக்கூடாது.**

**141.** யோகப்பயிற்சி – நான் பூமியின் சைத்தன்ய நட்சத்திரமாக பூமி உருண்டையின் மேல் இருக்கிறேன். எனக்கு மேலே ஞான சூரியன் சிவபாபாவும், ஞானச் சந்திரன் பிரம்மா அம்மாவும் இருக்கிறார்கள். ஞான சூரியன் பாபாவிடம் இருந்து சக்திகளும், ஞான சந்திரன் அம்மாவிடம் இருந்து சினேகத்தின் கதிர்களும் என்மீது விழுந்து கொண்டிருக்கிறது, நான் ஆத்மா சினேகம் மற்றும் சக்திகளின் கதிர்களால் நிறைந்து கொண்டிருக்கிறேன். இப்போது நான் அந்த கதிர்களை முழு உலக உருண்டையின்மீது பரப்புகிறேன், அது அப்படியே பரவி இந்த முழு உலகில் உள்ள ஆத்மாக்களையும் சினேகம் மற்றும் ஆன்மீக சக்திகளால் நிறைத்துக்கொண்டே இருக்கிறது, முழு உலகிற்கும் நான் ஆன்மீக பிரகாசத்தைப் பரப்பிக்கொண்டிருக்கிறேன்.

**142. அனைத்து அழியாத பொக்கிக்ஷங்களாலும் நிறைந்து- முழுமை பெறும் ஆத்மாக்களுக்காக பாபா சொன்னது - இந்த ஆத்மாக்கள் ஏதோ விசேசமானவர்கள், பற்றற்ற மற்றும் பரமாத்மாவிற்கு பிரியமானவர்கள் என்பதை உங்கள் முகம் மற்றும் நடத்தை வெளிப்படையாக அனுபவம் செய்ய வைக்க வேண்டும்.** பிரம்மா பாபாவைப் பார்த்தீர்கள் அல்லவா அவர் கூட்டத்தின் நடுவே இருந்தபோதிலும் தூரத்தில் இருந்தே பர்சனாலிட்டியின் ஜொலிப்பு அனுபவமானது. எனவே அந்த மாதிரி தந்தையைப் பின்பற்றுங்கள்.

**143.** எப்போது உங்கள் முகம் மற்றும் நடத்தையின் மூலமாக அலௌகீகத்தின் காட்சி கிடைக்கிறதோ அப்போது பிரத்தியட்சத்திற்கு நிமித்தமாவீர்கள். எனவே எப்போதும் முகம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். கவலை எதுவும் இருக்கக்கூடாது. குழப்பம் எதுவும் இருக்கக்கூடாது. எப்போதும் மாயாவை 'கெட் அவுட் செய்யுங்கள் மேலும் தன்னை 'கெஸ்ட்

ஹவுசில்' இருப்பதாக அனுபவம் செய்யுங்கள். இந்த உலகம் நம்முடையது அல்ல, இது''கெஸ்ட் ஹவுஸ்' என்பது புத்தியில் இருக்க வேண்டும். இப்போது நாம் பரம்தாம வீட்டிற்குப் போக வேண்டும்.

**144. நாம் எங்கே போனாலும் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்கு அவர் அப்படி இருந்தார், அவர் ஒரு பரிஸ்தாவாக இருந்தா, அவர் ஒரு ஒளியாக இருந்தார், சக்தியாக இருந்தார், அவர் ஒரு அலௌகீக மனிதராக இருந்தார் என அனுபவமாக வேண்டும் என்று பாபா சொல்கிறார்.** அந்த மனிதருக்கு அது ஒரு நினைவுச்சுவடாக இருக்க வேண்டும். எப்படி யாரோ ஒருவர் மகாத்மா காந்தியோடு இருந்திருக்கலாம் அல்லது கொஞ்ச காலத்திற்கு அவரது தொடர்பில் வந்திருக்கலாம், அவர் எப்போதும் அந்த கால நடப்புகளை நினைவில் வைத்திருப்பார் மேலும் நான் மகாத்மா காந்தியோடுகூட இந்த நேரத்தில் அல்லது இந்த ஜெயிலில் இருந்தேன் என தனது அனுபவத்தை அல்லது நினைவு சுவடை மற்றவருக்கும் எடுத்துச் சொல்வார்.

**145.** பிராமண வாழ்க்கை என்றால் சம்பூரண பவித்திர வாழ்க்கை, பவித்திரம் பிராமணர்களாகிய நம் அனைவருடைய பிறப்புரிமையாக இருக்கிறது. இந்த ஒரு பிறவியின் தூய்மை 21 பிறவிவரை தொடர்கிறது. **பவித்திரம் வெறும் பிரம்மச்சரியம் மட்டும் அல்ல ஆனால் மனம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பு அனைத்திலும் பவித்திரம். மனதின் பவித்திரம் என்றால் மனதில் எல்லோர்மீதும் சுபபாவனை மற்றும் சுபவிருப்பம் கொள்வது. வார்த்தையில் பவித்திரம் என்றால் வார்த்தையில் சினேகம் மற்றும் நிதானம் இருப்பது, செயலில் பவித்திரம் என்றால் கர்மத்தின் மூலமாக அனைவரையும் திருப்திபடுத்தும் பாவனை இருப்பது, சம்பந்தம் தொடர்பு சுகமயமாக இருப்பது.**

**146.** நான் பிரகாசமாக ஜொலித்துக்கொண்டிருக்கும் பரமபவித்திர ஆத்மா. நான் நெற்றியின் நடுவில் அமர்ந்திருக்கிறேன். பவித்திர ஆத்மாவாகிய என்னிடமிருந்து நிரந்தரமாக வெளிப்படும் தூய்மையின் கதிர்கள் துக்க அசாந்தியில் உள்ள அனைத்து ஆத்மாக்களுக்கும் சுக சாந்தியின் அஞ்சலி கொடுக்கிறது. அனைத்து ஆத்மாக்களும் ஆன்மீக அமைதியின் அனுபவம் பெற்று திருப்தியடைந்து கொண்டிருக்கிறார்கள்… இயற்கையின் ஐந்து தத்துவங்களும் தூய்மையாகிக் கொண்டிருக்கிறது …

**147.** நான் பவித்திரத்தின் சூரியனாக உலக உருண்டைமீது அமர்ந்து அபவித்திரத்தின் இருளை உலகத்திலிருந்து தூர விலக்கிக்கொண்டிருக்கிறேன். பவித்திரக் கடலிடமிருந்து பவித்திரத்தின் வெண்மையான தாரைகள் என்மீது விழுகிறது பிறகு அது என்னிடமிருந்து நாலாபுறமும் பரவுகிறது. நான் பரம பவித்திர பரிஸ்தா இந்த தேகத்தில் இருந்து விலகி பரிஸ்தாக்களுடைய உலகத்திற்கு செல்கிறேன் அங்கே இயற்கையின் ஐந்து தத்துவங்களும் கைகூப்பி என்னை வரவேற்கிறது. நான் பாபாவிடமிருந்து பவித்திர கிரணங்களைப் பெற்று அவைகளை தூய்மையாக்குகிறேன்.

**148.** பரிஸ்தா என்றால் டபுள் லயிட், டபுள லயிட், என்றால் உடலும் லயிட மற்றும் மனமும் லயிட். மனதில் எந்தவிதமான வீண் சுமைகளும் இருக்கக்கூடாது. ஒருவேளை எந்த விதத்திலாவது மனதில் சுமைஇருந்தால் டபுள் லயிட் பரிஸ்தா சொரூபத்தை அனுபவம் செய்ய முடியாது. எனவே எந்த சுமை இருந்தாலும் அதை பாபாவிடம் கொடுத்துவிட்டு டபுள லயிட் ஆகி பறக்கும் கலையை அனுபவம் செய்யுங்கள்.

**149.** நிறைந்த (சம்பன்ன) முழுமையான (சம்பூரண) ஆத்மாவின் அடையாளம் - ஹோலியஸ்ட், 'ஹையஸ்ட் மற்றும் 'ரிச்சஸ்ட். 'ஹோலியஸ்ட் என்றால் மனம், சொல், செயல் சம்பந்தம், தொடர்பில் பவித்திரமாக இருப்பது. கனவில்கூட அபவித்திரம் மனம்-புத்தியை தொடக்கூடாது. 'ஹையஸ்ட்' என்றால் பரந்தாமத்தில் மிக உயர்ந்த பாபாவுடன் இருக்கும் அனாதி நிலை. தேவ சொரூபத்தில் ஆத்மா, சரீரம் இரண்டும் பவித்திரமாக இருப்பது. மத்திய காலத்தில் எத்தனை அழகான கோயில், எத்தனை விதிமுறைப்படி பூஜை. 'ரிச்சஸ்ட் என்றால் அனைத்து அழியாத பொக்கிஷங்களின் அதிபதி. உலகத்தில் உலகத்திலேயே பெரிய

பணக்காரன் என்று சொல்கிறார்கள் ஆனால் கல்பத்திலேயே பெரிய பணக்காரர்கள் நீங்கள். எதை நீங்கள் இந்தப் பிறவியில் பெறுகிறீர்களோ அது பின்னர் அனேக ஜென்மங்களுக்கு கூடவே வருகிறது.

**150.** பாப்சமான் நிறைவாக, முழுமையாக இருப்பது என்றால் பாபாவிடம் இருக்கும் குணங்களும் சக்திகளும் என்னிடத்தில் இருக்க வேண்டும் … எது பாபாவின் சொல்லாக, செயலாக இருக்கிறதோ அதுவே எனதாகவும் இருக்க வேண்டும் … எது பாபாவின் சமஸ்காரமாக இருக்கிறதோ அதுவே என்னுடைய சமஸ்காரமாகவும் இருக்க வேண்டும். எனவே பாபாவை பிரத்தியட்சம் செய்ய வேண்டும் என்றால் பாபா எப்படி நிறைவாகவும் முழுமையாகவும் இருக்கிறாரோ அப்படி பாப்சமான் நிறைவும், முழுமையும் பெற்று முதலில் தன்னை பிரத்தியட்சம் செய்யுங்கள். எப்போது தன்னை பிரத்தியட்சம் செய்கிறீர்களோ அப்போது பாபா தானே பிரத்தியட்சம் ஆகிவிடுவார்.

**151.** முழுமையாவதற்கு அதாவது நிறைநிலை பெறுவதற்கு ஐந்து சொரூபங்களை பயிற்சி செய்யுங்கள்.1.**அனாதிரூபம்- பரந்தாமத்தில்நான் ஆத்மா சிவபாபாவுடன் இணைந்து இருக்கிறேன். 2. ஆதி சொரூபம்- சத்யுகத்தில் நான் ஆத்மா தேவ சொரூபத்தில் இருக்கிறேன். 3. பூஜ்ய சொரூபம் - இஷ்ட தெய்வமாகி பக்தர்களுக்கு வரமளிக்கிறேன் 4. சங்கமயுக பிராமண சொரூபம்-ஈஸ்வரிய குழந்தை என்ற போதை, 5. கடைசி பரிஸ்தா சொரூபம்-தனது பரிஸ்தா சொரூபத்தின்** மூலமாக முழு உலகில் உள்ள ஆத்மாக்களுக்கும் ஆற்றல் அலைகளை கொடுக்கிறேன்.

**152.** எப்போதும் தனது முயற்சியால் முன்னேறக்கூடிய ஆத்மாவாக இருக்கிறேன் என அனுபவம் செய்கிறீர்களா? முயற்சியில் சிலநேரம் நிற்கும் கலை, சிலநேரம் உயரும் கலை என இருப்பதில்லையே. சிலநேரம் மிக நல்லது, சில நேரம் நல்லது, சில நேரம் நல்ல யோகம் என இருக்கக்கூடாது. எப்போதுமே மிக நல்லதாக இருக்க வேண்டும் ஏனெனில் நேரம் மிகக் குறைவாக இருக்கிறது சம்பூரணமாக வேண்டும் என்ற குறிக்கோள் மிக உயர்வாக இருக்கிறது.

**153.** தனது முயற்சியின் வேகத்தையும் அதிகப்படுத்த வேண்டும். எப்போதும் **டபுள் லயிட்டாக இருப்பதே, முயற்சி தீவிரமாக இருப்பதன் அடையாளமாகும்.** எந்தவிதமான சுமையின் அனுபவமும் இருப்பதில்லை. இயற்கையின் மூலமாக அல்லது சூழ்நிலை மூலமாக அல்லது மனிதர்கள் மூலமாக என எந்த விதத்தில் பிரச்சினைகள் வந்தாலும், ஒவ்வொரு பிரச்சினையும் சுயநிலைக்கு முன்னால் ஒன்றுமே இல்லாததாக அனுவமாகும்.

**154.** சுயநிலையின் சக்தி புறநிலையைக் (பிரச்சினை) காட்டிலும் உயர்வாக இருப்பது ஏன்? இது சுயம், அது புறம். தனது சக்தியை மறந்து விடுகிறீர்கள். அப்போதே புறநிலை பெரியதாகத் தெரிகிறது. எப்போதும் **‘டபுள் லயிட்’ என்பதன் அர்த்தமே எப்போதும் மேலே இருப்பது**. இலேசாக இருப்பது எப்போதும் மேலே போகும், சுமையாக இருப்பது எப்போதும் கீழே வரும். அரை கல்பம் கீழே வந்துகொண்டே இருந்தீர்கள். ஆனால, இப்போதய நேரம் மேலே போகக்கூடியதாக இருக்கிறது.

ஓம்சாந்தி